MINUTES OF ANNUAL GENERAL METING HELD ON SUNDAY 3 NOVEMBER 2019 AT 11.00 AM AT ANANDA BHAVAN RESTAURANT, 95 SYED ALWI ROAD, SINGAPORE 207671

Attendance

Total Voting Members: 106

	General Secretary welcomed members and called the meeting to order at 11.10am. The quorum was 87 at the time of commencement of meeting.
1	**Standing Orders**
1.1	General Secretary proposed that the Standing Orders for the AGM to be adopted before the commencement of the AGM.
1.2	The Standing Orders were adopted as proposed by Mr Mashuthoo and seconded by Mr Kalaichelvam.
2	**Address by President**
2.1	Full text of President's speech to be found in *Annex A*.
3	**To confirm and adopt the Minutes of the Annual General Meeting held on 18 November 2018**
3.1	Mr Harikrishnan pointed out that he had suggested for the Notes of the Meeting and the Annual Report to be also available in Tamil as this was Tamils Representative Council (TRC) and one of the main objectives being the promotion of the Tamil Language. He enquired whether his suggestion had been implemented and if not for the Management Council (MC) to consider implementing it in future.
3.2	GS thanked Mr Harikrishnan and replied that his suggestion was noted and that the MC will look into implementing it for the next AGM.
3.3	Mr Manimaran also queried on the same and asked why it has not been implemented.
3.4	President clarified that this could not be done this year due to various constraints, one being the lack of a full-time staff. He assured the meeting that this should be attended to for the next AGM.
3.5	Mr Thamizmaraiyan further suggested that if the MC had difficulties, it could be delegated to vendors to translate the documents at a certain cost.
3.6	As there were no other matters arising, the meeting notes of the AGM held on 18 November 2018 was duly confirmed as proposed by Mr Muthu and seconded by Mr Tam Shanmugam.
4	**Matters arising out of the minutes of the General Meeting of 18 November 2018**
4.1	There were no matters arising out of the Minutes.
5	**To receive and adopt the Report of the Management Council for 2018** Mr Manimaran noted that the report was for the period 1 Jan 2018 to 31 Dec 2018 and the AGM was being held in November, more than 10 months later. As such, he queried as to

5.1	why the AGM has been delayed as the Constitution states that it should be held by the month of June. In addition, he also stated that he was a life member and also the president of Saiva Sidthantha Sangam, an affiliate member. On page 4 of the Report, it is noted that TRC has 298 Life Members, 665 Ordinary Members, and 37 Affiliates. Based on the Constitution, the affiliates each have only 2 votes. TRC is not a society, but a coordinating body. We should review the original objectives of why TRC was formed by the late Mr Sarangapany. TRC is a body which brings together all organisations and as such the voice of the organisations should be heard here and not that of individual persons. Based on the current representation, the societies do not have the power to approve any decisions or vote for changes. The representation of individual members far outweighs the affiliates. In his view it was a sad state of things. As such he wanted to know the views of the MC on whether TRC is a society on its own or a representative body?
5.2	President clarified that although the accounts were submitted to the external auditors in March, the audit report only came in October after seeking much clarifications. Each year the audit requirements have been increasing with new rules being implemented. However, in June the MC had informed ROS that the AGM will be delayed. ROS had acknowledged and replied for the AGM to be held as soon as possible.
5.3	On Mr Manimaran's queries on the membership issues, President explained that Constitution was clear on TRC having direct members (Life and Ordinary) and Affiliates. Further the Constitution had also laid down the rules on representation and number of votes each type of member had. President agreed that when TRC was first formed, it could have started with only Societies being members. In the fifties to seventies the number of societies were many and all were active. However, as time passed the number of societies had dwindled such that when Mr Kandasamy took over as President there were very few affiliate members. It was then the Constitution had been amended to allow for direct members to ensure the continued existence and progress of TRC. He further suggested that the composition of members can be reviewed as part of the Constitution review. However, he cautioned that only depending on societies being members may be dangerous as then if these societies were to close down, TRC will eventually disappear.
5.4	Mr Krishnasamy echoed President's point of changes being made due to the low number of affiliates being members in the eighties. In fact, he was the one who proposed for TRC to have direct members to ensure the continued survival of TRC. This had been in effect for many years. If Manimaran had wanted to, he could have brought this up much earlier and suggested amendments. Why bring it up now? He also cautioned members to be careful of making changes without giving proper consideration as it may lead to the erosion of TRC.
5.5	Mr Kalaiselvan informed that he had been a member since Mr Kandasamy's time and he was present when the changes were made. He had abstained from participating in TRC activities for some time. However, he had noted that under the leadership of Mr Pandiyan, TRC was doing well and making significant contributions to the Community and as such, he was more active lately. Mr Kandasamy had the view that the affiliates were not financially strong and as such individual members, professionals who had the means to contribute funds should be brought in to sustain the organisation. Many individuals like Dr Veeramani had then joined and brought TRC to the next level. Later during Dr Theyvendran's time, more weightage was given to individuals and TRC became a big Society on its own. He was also of the opinion that we can keep the individual membership, but more importance should be given to the affiliates. He suggested that TRC should consider copying the structure of FIM (Federation of Indian Muslims) as only then, the voice of the community will have weight when raising any issues faced by the community.

5.6	Mr Ilangovan commented that the views presented by members so far are very valid views, which should be considered by the Constitution review committee. That should be the appropriate venue.
5.7	Mr Sivabalan reiterated that TRC's position can be strengthened with more balanced membership and hoped that the Constitution review committee will look into this.
5.8	Mr Manimaran suggested the following in order to reflect TRC as a representative body: -The composition of the management committee to be made up of at least 12 affiliate representatives and 9 individuals so that the affiliates have a strong voice. -Currently, individuals can show their IC to register on AGM day. However, affiliates need to register their representatives a week earlier. In order to be more neutral, affiliates representatives can be requested to show an official letter on AGM day to register.
5.9	President thanked all members for their views and indicated that the Constitution Review Committee will consider their suggestions. He further invited Mr Manimaran to provide his feedback to the sub-committee when asked to.
5.10	Mr Uthirapathy added that if all societies functioned with a unified objective, then there will be no necessity for individual members. He hoped that TRC will serve all and adapt a neutral role. Until such time all societies come together and serve as one, the need for other types of membership will be necessary.
5.11	Mr Ilangovan commented that overall, TRC was doing a good job and that the President was holding the fort well. However, he noted that when a matter or issue is raised, it is looked into and acted upon. Then it lapses. Parents continue to find difficulties in finding which schools are offering Tamil and TRC did put up this list on the website. But now it is not there. He suggested that TRC continues to update this on the website so members can check and know. In addition, if the accounts were sent to the external auditors monthly, there should not be a delay in the audit report.
5.12	As there were no further queries, the Annual Report was adopted as proposed by Mr Harikrishanan and seconded by Mr Krishnasamy.
6	**<u>To receive and adopt the Audited Statement of Accounts for the year 2018</u>**
6.1	Mr Ilangovanvan queried on the late payment fees of $800 plus and commented that better control is needed. Also, as to the surplus that has been reflected in the accounts, looks like we made some savings from not having to pay a full-time staff.
6.2	President explained that since there was no full-time staff, there was a delay in preparing accounts and submitting the IRAS statement and hence TRC had to pay the penalty payment to IRAS. TRC did appeal to IRAS, but it was turned down.
6.3	The Accounts was adopted as proposed by Mr Ilangovanvan and seconded by Mr Gunasegaran.
7	**<u>To elect (4) Scrutinizers to conduct the voting process</u>**
7.1	The meeting agreed to push this item to after dealing with Item 10 on the agenda.
8	**<u>To elect the Management Council for the period 2019 to 2021</u>**

8.1	The meeting agreed to push this item to after dealing with Item 10 on the agenda.
9	**<u>To elect 2 Internal Auditors to the Management Council for the period 2019 to 2021</u>**
9.1	President proposed that the incoming Management Committee to be given the authority to appoint the internal auditors at its first meeting after the AGM.
9.2	This proposal was endorsed, as proposed by Mr Mashuthoo and seconded by Mr Harikrishnan.
10	**<u>To confirm appointment of External Auditors for the period 2019 to 2021</u>**
10.1	President informed that the Management Committee had agreed to retain M/s AAA Assurance PAC, the External Auditor for 2020/2021 and was submitting to the AGM for confirmation.
10.2	Mr Manimaran observed that there was an increase in fees for the existing auditors and queried if there was a need to continue with their services.
10.3	Mr Harikrishnan explained that there have been many changes in the regulations of auditing non-profit organizations and auditors have to ensure strict compliance. The authorities are also keeping a close watch on the auditing of accounts by non-profit organisations. Hence, the increase in fees is a negligible amount.
10.4	President assured that the MC had obtained three quotations and the proposal to retain the auditors was a decision made by the MC. Further, as auditors generally were not willing to audit non-profit organizations, the choices were limited.
10.5	The appointment of AAA Assurance PAC as TRC's external auditors for 2020/2021 was confirmed, as proposed by Mr Fariullah and seconded by Mr A K Lakshmanan.
11	**<u>To consider such other business of which at least 3 days' notice in writing shall have been given to the General Secretary</u>**
11.1	President informed that TRC has received several motions prior to the AGM for discussion in accordance with Clause 9.6.5 of the Constitution. (I) Mahatma Ghandi Memorial Hall (Annex B and Annex C)
11.2	Mr Sivanesan from Thiruvalluvar Tamil Valarchik Kazhagam, raised the issue of the Mahatma Ghandi Memorial Hall going into trusteeship and opined that it belongs to the Indian/Tamil community and the best organisation to take over would be TRC. Funds were contributed by many Indians (majority being Tamils), including Mr Jumabhoy, Mr P Govindsamy Pillai and Mr Packirisamy. It is a public building which belongs to the Indians. At various intervals, individuals had attempted to take control of the building. Now its under the trust by several individuals. Now, I understand that the Indian Heritage Board wishes to take over the building for its own purposes. Representations had been made to Ministers that the building should be handed over to the Tamil community, but the reply was that a decision has been made to place it under IHC. He suggested that it was not fair, and it should be given to the Tamil community. And the best organisation that could take over and manage it will be TRC. He suggested that we should 'fight' for the building at all cost. Some ground work has already commenced as regards this. He wanted to know the extent to which TRC and its Affiliates were willing to commit to this.

11.3	The same matter had also been raised by Mr Uthirapathy, Life member. He pointed out that he was sad to note that we have for many years only been discussing certain issues, but had never taken the next step to act on it. He hoped that we should together take attempts to get the building back to the community. For many years, we have been talking about having our own building, but nothing has been done to date.
11.4	Mr Kalaiselvan remembered that in 2002 there was some discussion on TRC having a building of its own. Now we are in 2019. We have yet to see any moves being made to have our own building. He hoped that TRC would take up the efforts to obtain this building.
11.5	Mr Manimaran supported the motion and hoped that the incoming MC will consider and give its full support.
11.6	Mr Thamizhmaraiyan updated that he has sent an email to the officials and feedback unit on this matter.
11.7	President assured that, as indicated in his address, having a building of our own was important. In the short-term the MC was looking at expanding its current lease to include more space. Embarking on the building project was not something easily taken. A proper study must be undertaken to ensure that we have the funds, proper group of people to raise funds and manage the building. TRC alone cannot undertake this project. All its affiliates and other Tamil organisations should come together to raise funds. TRC in principle will always support any community efforts to have a building for the community.
11.8	Both Mr Sivabalan and Mr Uthirapathi accepted the assurance given by the President and agreed that their motions had been addressed.
	(II) Tamil & Tamils Education Sub-Committee (Annex D)
11.9	President replied that the MC already had a sub-committee for Language & Education, and he suggested that Mr Manimaran's proposals be submitted to this sub-committee for further consideration and implementation if necessary.
11.10	Mr Ilangovan indicated that he has no objection to Mr Manimaran's proposal. TRC has always focused on education and there has been a sub-committee to handle issues relating to education. But along the way it had been paired with culture. Tamil language is a part of education and issue relating to Tamil (students' grades, weightage etc) should be taken into consideration. He agreed that the Education committee should be tasked to look at the proposals rather than having a separate committee just to look into Tamil and Tamil Education. He also suggested that the Education Sub-committee should be headed by someone who is able to understand and analyse future trends and come up with possible suggestions.
11.11	Mr Ponn Sundararasu highlighted that TRC is the proper body to give importance to Tamil and Tamil Language. He referred to a programme 'Maathi Yosi' organised by the Youth Wing. He had suggested that the report should also be in Tamil and had sent an email to Mr Arun (YW Chairman). However, to date he had not received any reply. He hoped that at least an acknowledgement should have been sent and in future such suggestions are incorporated.
11.12	President informed that Mr Manimaran's proposals as stated in his submission will be referred to the Education Sub-Committee for discussion and consideration.

	(III) To set up a TRC Building Fund Account and transfer sum of $700,000 from the TRC General Fund to the TRC Building Fund and that such sum shall only be utilised for purposes of purchasing a property. (Annex D)
11.13	Mr Kunaseakanan submitted that TRC's funds had been raised through different channels and events for a variety of purposes, but mainly for education related purposes. As such it was not practical to channel existing funds and specify that it should only be used for building purposes. Further transferring a major portion of TRC's funds will impact its operations in the long term. He further suggested that all affiliates should come forward to raise funds for this cause.
11.14	Mr Sivabalan explained that building and education funds are tax-free. He also suggested holding fund raising events. Psychologically, it will be helpful to show a substantial amount of funds to attract donations as it shows our seriousness. The amount to be transferred need not be $700,000. It could be lesser. If TRC needs funds, then it should be able to raise accordingly.
11.15	Mr Jothenathan recalled that Giro was started citing education, cultural and building funds. He queried if there was any change in the status. He also advised to document the history and objectives behind various decisions and to pass them down in a proper manner so that goals can be set for the future.
11.16	Mr Kalaiselvam cited item 3.1.7 of TRC constitution that puts forward the idea of establishing a Headquarters for the Tamil speaking community in Singapore. He suggested engaging the government on this matter as many Tamil organisations have given up their buildings willingly for the sake of urbanization.
11.17	Mr Ilangovanvan submitted that TRC already has a building fund and suggested to check on the book value of the building fund and this amount can be put aside as a start. Even though the various funds had been merged into on single fund, we should be able to check the records and derive the book value for each fund and then set aside the amount relating to the building fund. He submitted that the meeting do not fix the amount to be transferred as $700,000 or any other amount but for the MC to check its records and then put aside the book value amount.
11.18	Mr Manimaran submitted that he had suggested the sum of $700,000 after accounting for $100,000 plus for TRC's expenses. However, if members felt that it was too high, he was agreeable to reducing it. Another issue was the amendments made to the Funds as GIRO was being collected for different funds. He was not sure if the members had agreed to the amendments.
11.19	Mr Kalaichelvam echoed that having a building on our own is an important aspect of Tamil identity. There were more than 30 organisations affiliated to TRC. He recalled offering to donate $10,000 to a building fund. Now, he is willing to donate $20,000 (in total) under Periyar Community Organisation. At the same time, he urged that each affiliate should also come forward and contribute to the fund. He also cautioned that embarking on a building should not be taken in haste. There will be maintenance cost, loan payments, taxes etc. TRC alone should not be burdened with all this. Rather it should be a community effort.
11.20	Mr Sivabalan assured that the Thiruvalluvar Valarchi Kazhagam is ready to raise any amount for the building as determined by TRC. All the issues in respect of a building will have to be considered. Every Tamil organisation and every Tamil should be made to have a share in the building.

11.21	President in principle agreed that a building fund should be set up. However, the MC will have to explore this as there was a need to check if the Constitution allowed for such a fund to be setup and also whether the transfer of any money is also allowed. As suggested by Mr Ilangovan, he welcomed the idea of looking at the book value and then deciding on this.
11.22	President also suggested that a Building Sub-Committee be set up and let that committee do its home work – amount needed, raising funds, managing the building etc. Many affiliates including SKML, STWA had also agreed in the past to contribute to the building fund. And he hoped that all affiliates will eventually come forward to donate and also help in raising the funds.
11.23	In finality there were 2 proposals. One by Mr Manimaran to set up the building fund and transfer a minimum of $500,000. Another by President – for the MC to look into setting up a building fund in accordance with the Constitution and then to check and transfer (subject to the Constitution) the book value amount.
11.24	Mr Manimaran submitted that he was willing to agree to the counter proposal made by the President, on the condition that President gives and undertaking that it is done within the next 6 months.
11.25	As Mr Manimaran had informed that he was accepting the counter proposal made by the President, his own proposal was deemed as withdrawn. (IV) That the Management Council set up a TRC Building Sub-Committee
11.26	President stated that in the earlier discussion many had given feedback on this too and that in principle he was agreeable to setting up this cub-committee. He further, invited Mr Manimaran to be the interim Chairman for this sub-committee.
11.27	The role of the interim sub-committee was to draw up the proper terms of reference and identify suitable persons to form the actual sub-committee and proceed with the building project within 6 months.
11.28	Mr Manimaran accepted the invitation by President to chair the interim Building sub-committee. This was seconded by Mr Harikrishnan.
12	**Other Matters**
12.1	Mr Mohd Bilal pointed out the issue of last-minute cancellation of permits for overseas speakers invited by Indian organisations. He requested TRC to be a bridge between the authorities and the Indian organisations to resolve such issues in future.
12.1	Mr Gunasegaran requested TRC to encourage lifelong learning among Tamils and urge them to attend such courses in Tamil.
12.2	He also informed that he had formed a non-profit organisation (Innovative Indian Arts Centre) and will like to join TRC as an affiliate. He hoped that his request will be considered and his application will be approved.
13	**To elect the Management Council for the period 2019 - 2021**
13.1	President informed that there were 22 nominations for the 21-member management committee. As there will be a voting to be conducted, he invited Mr Manimaran to nominate 2 Scrutinisers.

13.2	Mr Manimaran nominated Mr Sivabalan and Mr Uthirapathy. President nominated Mr Harikrishnan and Mr Krishnasamy as the other 2 Scrutinisers.
13.3	Members unanimously agreed to the 4 nominations and for Mr Harikrishnan to be the Chief Scrutiniser.
13.4	Mr Kalaiselvan pointed out that the Constitution states that there should be separate elections for direct members and affiliate members.
13.5	Clause 12.1 states as 12 councillors to be selected from amongst the individual members and 9 councillors to be elected from amongst the institutional members.
13.6	He further suggested that as Mr Manimaran had been invited and accepted as Chairman of the interim Building Committee, and he is also a candidate for the election, the meeting could elect all 22 members into the Council.
13.7	President then pointed out that one of the nominees Mr Rajid was unable to make it for the AGM due to urgent overseas travel. And according to the election's guidelines, the general body can accept or reject his nomination as he was not present.
13.8	After further discussion and to avoid lengthening the meeting, Mr Harikrishnan put forward the proposal that the meeting do not accept his nomination as he was not present. Accordingly, there will be a total of 21 nominations after excluding Mr Rajid and as such there will be no necessity to conduct an election.
13.9	The meeting also agreed that the question of co-opting Mr Rajid will be decided by the MC.
13.10	Mr Harikrishnan's proposal was agreed as proposed by Mr Thirunalkarasu and seconded by Mr Fariullah and the meeting agreed that the 21 nominees be elected into the Management Council for the next term.
13.11	The meeting also noted Mr Jothenathan's views on being transparent about the election process and that the role and responsibilities of the General Body and the MC should be separate and distinct. President thanked everyone for their presence and announced the conclusion of the meeting at 1.40pm and invited everyone to lunch.

Minutes Recorded by: **Ms R G Thiruselvi, Deputy General Secretary**

Vetted by: **Mr S Tharmaraj, General Secretary**

Approved by: **Mr V Pandiyan, President**

2019-ஆம் ஆண்டு, நவம்பர் மாதம், 3-ஆம் தேதி அன்று காலை 11 மணிக்கு, ஆனந்தபவன் உணவகத்தில் (95 சையட் அல்வி ரோடு, சிங்கப்பூர் 207671) நடைபெற்ற ஆண்டுப் பொதுக் கூட்டத்தின் குறிப்புகள்

வருகைப் பதிவு

வாக்களிக்கத் தகுதிபெற்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை: 106

	பொதுச் செயலாளர் உறுப்பினர்களை வரவேற்று, காலை 11.10 மணிக்கு, கூட்டத்தைத் தொடங்கினார். கூட்டம் தொடங்குகின்ற நிலையில், குறைவெண் வரம்பு அடிப்படையில் 87 உறுப்பினர்கள் இருந்தனர்.
1	**நிலையான ஆணைகள்**
1.1	ஆண்டுப் பொதுக்கூட்டம் தொடங்குவதற்கு முன்னர் நிலையான ஆணைகள் பின்பற்றப்படவேண்டும் என்ற கோரிக்கையை பொதுச் செயலாளர் முன் வைத்தார்.
1.2	நிலையான ஆணைகள் பின்பற்றப்படவேண்டும் என்று, திரு மசூது முன்மொழிந்தார்; திரு கலைச்செல்வம் வழிமொழிந்தார்.
2	**தலைவர் உரை**
2.1	தலைவரின் முழு உரை *பிற்சேர்க்கை 'அ'-வில்* இடம்பெற்றுள்ளது.
3	**2018-ஆம் ஆண்டு, நவம்பர் மாதம், 18-ஆம் தேதி அன்று நடைபெற்ற ஆண்டுப் பொதுக் கூட்டத்தின் குறிப்புகளை உறுதிப்படுத்தி, ஏற்றுக்கொள்ளுதல்**
3.1	தமிழர் பேரவையின் முக்கிய நோக்கங்களில் ஒன்று தமிழ்மொழியின் வளர்ச்சியை ஊக்குவிப்பது என்பதால், கூட்டக் குறிப்புகளும் ஆண்டு அறிக்கையும் தமிழில் இடம்பெறவேண்டும் என்று திரு ஹரிகிருஷ்ணன் சுட்டினார். அவரது இந்தக் கருத்து அமல்படுத்தப்பட்டுள்ளதா என்று திரு ஹரிகிருஷ்ணன் வினவினார். அமல்படுத்தப்படவில்லை எனில், வருங்காலத்தில் அதனை அமல்படுத்த மேலாண்மைக் குழுவிற்கு எண்ணம் உள்ளதா என்றும் திரு ஹரிகிருஷ்ணன் கேட்டார்.
3.2	பொதுச் செயலாளர், திரு ஹரிகிருஷ்ணனுக்கு நன்றி கூறினார். அவரது கருத்து குறித்துக்கொள்ளப்பட்டதாகவும், அடுத்த ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் அது அமல்படுத்தப்படுவது பற்றி மேலாண்மைக் குழு பரிசீலிக்கும் என்றும் பொது செயலாளர் பதிலளித்தார்.
3.3	திரு மணிமாறனும் அதுபற்றிக் கேள்வி எழுப்பினார். அத்திட்டம் அமல்படுத்தப்படாததற்கான காரணத்தை அவர் வினவினார்.
3.4	பல்வேறு தட்டுப்பாடுகளின் காரணமாக, அத்திட்டம் இவ்வாண்டு அமல்படுத்தப்படவில்லை என்று தலைவர் தெளிவுபடுத்தினார். அவற்றுள் ஒன்று,

	முழுநேர பணியாளர் இல்லாதது ஆகும். அடுத்த ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் இந்த அம்சம் நிறைவேற்றப்படும் என்று அவர் உறுதியளித்தார்.
3.5	மேலாண்மைக் குழுவிற்கு சிரமங்கள் இருப்பின், ஒரு குறிப்பிட்ட தொகைக்கு ஆவணங்களை மொழிபெயர்க்க, மொழிபெயர்ப்பு நிறுவனங்களின் உதவியை நாடலாம் என்று திரு தமிழ்மறையான் கூறினார்.
3.6	வேறு அலுவல்கள் ஏதும் இல்லாத நிலையில், 2018-ஆம் ஆண்டு, நவம்பர் மாதம், 18-ஆம் தேதி நடைபெற்ற ஆண்டுப் பொதுக்கூட்டக் குறிப்புகளை உறுதிப்படுத்த, திரு முத்து முன்மொழிந்தார்; திரு தாம் சண்முகம் வழிமொழிந்தார்.
4	**2018-ஆம் ஆண்டு, நவம்பர் மாதம், 18-ஆம் தேதி நடைபெற்ற ஆண்டுப் பொதுக் கூட்டக் குறிப்பை ஒட்டிய மேற்படி நடவடிக்கைகள்**
4.1	குறிப்புகளை ஒட்டிய, மேற்படி நடவடிக்கைகள் ஏதும் இல்லை.
5	**2018-ஆம் ஆண்டுக்கான மேலாண்மைக் குழு அறிக்கையை உறுதிப்படுத்தி, ஏற்றுக்கொள்ளுதல்**
5.1	மேற்குறிப்பிட்ட அறிக்கை, 2018-ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் ஒன்றாம் தேதி முதல் டிசம்பர் மாதம் 31-அம் தேதி வரைக்கானது என்பதையும், ஆண்டுப் பொதுக் கூட்டம் நவம்பர் மாதத்தில், 10 மாதங்கள் கழித்து நடைபெறுவதையும் திரு மணிமாறன் சுட்டினார். ஆக, ஆண்டுப் பொதுக் கூட்டம் தாமதமாக நடத்தப்படுவதற்கான காரணத்தை அவர் வினவினார். தமிழர் பேரவையின் அரசியலைமைப்புச் சட்டத்தின்படி, ஆண்டுப் பொதுக் கூட்டம் ஜூன் மாதத்திற்குள் நடைபெறவேண்டும் என்பதையும் அவர் நினைவுபடுத்தினார். மேலும், அவர் தாம் ஓர் ஆயுள் உறுப்பினர் என்றும், இணை உறுப்பினத்துவம் கொண்ட சைவ சித்தாந்த சங்கத்தின் தலைவர் என்றும் குறிப்பிட்டார். அறிக்கையின் 4-ஆம் பக்கத்தில், தமிழர் பேரவை 298 ஆயுள் உறுப்பினர்கள், 665 சாதாரண உறுப்பினர்கள், 37 இணை அமைப்புகள் என்ற எண்ணிக்கையில் உறுப்பினத்துவத்தைக் கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழர் பேரவையின் அரசியலைப்புச் சட்டத்தின்படி, இணை அமைப்புகளுக்கு தலா இரண்டு வாக்குகள் மட்டுமே உள்ளன. தமிழர் பேரவை, ஒரு மன்றம் அல்ல; ஒருங்கிணைக்கும் கூட்டமைப்பு. காலஞ்சென்ற திரு சாரங்கபாணி அவர்களால் தமிழர் பேரவை தோற்றுவிக்கப்பட்ட மூலக் காரணங்களை நாம் பரிசீலிக்கவேண்டும். தமிழர் பேரவை, அனைத்து அமைப்புகளையும் ஒருங்கிணைக்கும் ஒரு கூட்டமைப்பு. ஆக, தமிழர் பேரவை, அமைப்புகளின் குரலாக ஒலிக்கவேண்டும்; தனி நபர்களின் குரலாக அல்ல. தற்போதைய பிரதிநிதித்துவத்தின்படி, அமைப்புகளுக்கு முடிவை மாற்றுவதற்கு அல்லது மாற்றங்களின் பேரில் வாக்களிப்பதற்கு அதிகாரம் கிடையாது. தனிநபர்களின் பிரதிநிதித்துவம் இணை அமைப்புகளைக் காட்டிலும் மிகுதியாக உள்ளது. அவரது பார்வையில், அது வருந்தத்தக்க ஒரு நிலையாகக் கருதப்படுகிறது. ஆக, தமிழர் பேரவை ஒரு தனி அமைப்பா அல்லது ஒரு பிரதிநிதித்துவ அமைப்பா என்பது பற்றிய மேலாண்மைக் குழுவின் கருத்துகளை, அவர் கேட்டறிய விரும்பினார்.

5.2	தமிழர் பேரவையின் வரவுசெலவுக் கணக்குகள், வெளித் தணிக்கையாளர்களிடம் மார்ச் மாதத்திலேயே கொடுக்கப்பட்டபோதிலும், பல தெளிவுறுத்தல்களுக்குப் பின்னர், தணிக்கை அறிக்கை, அக்டோபர் மாதத்திலேயே வெளிவந்தது என்பதை தலைவர் தெளிவுபடுத்தினார். புதிய விதிமுறைகள் தொடர்ந்து அமல்படுத்தப்பட்டு வருவதால், ஒவ்வோர் ஆண்டும் தணிக்கை முறைமைகளுக்கான தகுதி வரம்புகள் அதிகரித்துக்கொண்டே இருக்கின்றன. இருப்பினும், ஜூன் மாதத்தில், ஆண்டுப் பொதுக் கூட்டம் தாமதிக்கப்படும் என்பதை மேலாண்மைக் குழு, சங்கங்கள் பதிவகத்திடம் தெரிவித்தது. பதிவகமும் அதற்கு இணங்கி, ஆண்டுப் பொதுக் கூட்டத்தைக் கூடுமானவரை, விரைவில் நடத்தும்படி கேட்டுக்கொண்டது.
5.3	உறுப்பினத்துவ விவகாரங்கள் குறித்த திரு மணிமாறனின் கேள்விகளைப் பொறுத்தமட்டில், தமிழர் பேரவை தனிநபர் உறுப்பினர்களையும் (ஆயுள், சாதாரண) இணை அமைப்புகளையும் கொண்டிருக்கும் அளவில், பேரவையின் அரசியலைமைப்புச் சட்டம் தெளிவாக இருப்பதாய், தலைவர் கூறினார். மேலும், ஒவ்வொரு வகை உறுப்பினருக்கும் உரித்தான பிரதிநிதித்துவம், வாக்கு எண்ணிக்கை ஆகியவை பற்றிய விதிமுறைகளையும் பேரவையின் அரசியலைமைப்புச் சட்டம் கொண்டிருப்பதாக அவர் சொன்னார். தமிழர் பேரவை முதன்முறையாக தோற்றுவிக்கப்பட்டபோது, சங்கங்களை மட்டுமே உறுப்பினர்களாகக் கொண்டு தொடங்கப்பட்டிருக்கலாம் என்பதை தலைவர் ஒப்புக்கொண்டார். 1950-கள் முதல் 1970-கள் வரையில், பல சங்கங்கள் இருந்தன; அவை அனைத்தும் துடிப்பாகவும் செயல்பட்டு வந்தன. ஆனால், காலப்போக்கில் சங்கங்களின் எண்ணிக்கை குறையத் தொடங்கியது. ஆக, தமிழர் பேரவையின் தலைவராக திரு கந்தசாமி பொறுப்பேற்றுக்கொண்ட காலத்தில், மிகக் குறைவான சங்கங்களே இணை அமைப்புகளாக இருந்தன. அப்போதுதான், பேரவையின் அரசியலைமைப்புச் சட்டம் திருத்தப்பெற்று, நேரடி உறுப்பினர்கள் அனுமதிக்கப்பட்டனர். தமிழர் பேரவை தொடர்ந்து இருப்பதற்கும் வளர்ச்சி அடைவதற்கும் அது வகை செய்தது. மேலும், அரசியலைமைப்புச் சட்டம் மறுபரிசீலனை செய்யப்படுவதன் தொடர்பில், உறுப்பினர்களின் அமைப்புமுறை பரிசீலிக்கப்படலாம் என்று அவர் கூறினார். ஆனால், சங்கங்களை மட்டும் உறுப்பினர்களாகக் கொண்டிருப்பதில் உள்ள பாதகங்கள் குறித்தும் அவர் எச்சரித்தார். சங்கங்கள் மூடப்படும் நிலையில், தமிழர் பேரவை மறைந்து போவதற்கான சாத்தியம் உள்ளதை அவர் கோடிகாட்டினார்.
5.4	தலைவரின் கருத்தை மீள்வலியுறுத்தும் வகையில், 1980-களில் இணை உறுப்பினத்துவம் கொண்ட சங்கங்களின் எண்ணிக்கை குறைந்ததாலேயே மாற்றங்கள் கொண்டு வரப்பட்டதாக, திரு கிருஷ்ணசாமி அவர்களும் கூறினார். தமிழர் பேரவை தொடர்ந்து நிலைபெற்றிருப்பதற்காக, நேரடி உறுப்பினர்களைக் கொண்டிருக்கவேண்டும் என்பதை தாமே முன்மொழிந்ததாகவும் அவர் சொன்னார். இந்த நடைமுறை பல ஆண்டுகளாக நடப்பிலிருந்து வந்துள்ளது. திரு மணிமாறன் விருப்பப்பட்டிருந்தால், இதுபற்றிய கருத்துகளை நீண்டகாலத்திற்கு முன்னதாகவே கொண்டு வந்து, திருத்தங்களை முன்மொழிந்திருக்கலாம் என்று திரு கிருஷ்ணசாமி கூறினார். ஏன் இப்போது கொண்டு வரவேண்டும்? முறையாக பரிசீலிக்காமல் மாற்றங்களைக் கொண்டு வருவதன் தொடர்பில் உறுப்பினர்கள் கவனமாக இருக்கவேண்டும் என்றும் அவர் எச்சரித்தார். ஏனெனில், அது தமிழர் பேரவையின் அழிவுக்கு வித்திடக்கூடும்.

5.5	திரு கந்தசாமியின் காலம்தொட்டு தாம் தமிழர் பேரவையின் உறுப்பினராக இருந்து வருவதாகவும், மேற்குறிப்பிட்ட மாற்றங்கள் கொண்டு வரப்பட்டபோது தாம் இருந்ததாகவும் திரு கலைச்செல்வன் தெரிவித்தார். சில காலத்திற்கு தாம் தமிழர் பேரவையின் நடவடிக்கைகளிலிருந்து விலகியிருந்ததாக, அவர் சொன்னார். ஆனால், திரு பாண்டியனின் தலைமைத்துவத்தின் கீழ் தமிழர் பேரவை சிறப்பாக செயல்பட்டு, சமூகத்திற்கு கணிசமாக பங்களித்து வருவதைத் தாம் உணர்ந்ததாகவும், அதனால், அண்மைக் காலத்தில் கூடுதல் ஈடுபாடு காட்டி வருவதாகவும் அவர் சொன்னார். இணை அமைப்புகள் நிதி அளவில் நல்ல நிலையில் இருக்கவில்லை என்ற கண்ணோட்டத்தை திரு கந்தசாமி கொண்டிருந்ததாக திரு கலைச்செல்வன் கூறினார். அதனால், தமிழர் பேரவையை கட்டிக் காக்க, அதற்கு நிதிகளை அளிக்கக்கூடிய தொழிலர்கள், தனிநபர் உறுப்பினர்களாக அழைத்து வரப்படவேண்டும் என்ற எண்ணத்தை திரு கந்தசாமி கொண்டிருந்தார். பின்னர், முனைவர் வீரமணி போன்ற பல தனிநபர்கள், தமிழர் பேரவையில் சேர்ந்து, அதனை அடுத்த கட்டத்திற்கு அழைத்துச் சென்றனர். அதன்பின்னர், முனைவர் தேவேந்திரனின் காலத்தில், தனிநபர்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது; தமிழர் பேரவை தனியொரு அமைப்பாக உருவெடுத்தது. தமிழர் பேரவை தனிநபர் உறுப்பினத்துவத்தைத் தொடரும் அதே வேளையில், உறுப்பினத்துவம் கொண்ட இணை அமைப்புகளுக்குக் கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்படவேண்டும் என்ற கருத்தையும் திரு கலைச்செல்வன் முன்வைத்தார். தமிழர் பேரவை, இந்திய முஸ்லிம் பேரவையின் கட்டமைப்பை ஒப்பீடாகப் பார்க்கலாம் என்றும் அவர் கூறினார். அப்போதுதான், சமூகம் சந்திக்கும் பிரச்சினைகள் குறித்து குரல் எழுப்பப்படும்போது, அதற்கு தார்மீக அங்கீகாரம் இருக்கும் என்று அவர் சொன்னார்.
5.6	இதுவரை உறுப்பினர்கள் கூறிய கருத்துகள் யாவும் ஏற்கத்தக்கவை என்று திரு இளங்கோவன் கருத்துரைத்தார். தமிழர் பேரவையின் அரசியலமைப்புச் சட்டத்தைப் பரிசீலிக்கும் குழு அவற்றை சீர்தூக்கிப் பார்க்கவேண்டும் என்றும், அதுவே இவை குறித்து விவாதிக்க சரியான தளம் என்றும் திரு இளங்கோவன் கூறினார்.
5.7	மேலும் சமச்சீரான உறுப்பினத்துவத்தைக் கொன்டு, தமிழர் பேரவையின் நிலை வலுப்படுத்தப்படலாம் என்ற கருத்தை திரு சிவபாலன் மீண்டும் வலியுறுத்தினார். பேரவையின் அரசியலைமைப்புச் சட்டத்தை பரிசீலிக்கும் குழு, அதனை கவனத்தில் கொள்ளும் என்று தாம் நம்புவதாக அவர் சொன்னார்.
5.8	தமிழர் பேரவை, ஒரு பிரதிநிதித்துவ அமைப்பாக விளங்க, பின்வரும் கருத்துகளை திரு மணிமாறன் முன்மொழிந்தார். - இணை அமைப்புகளின் நிலையை வலுப்படுத்தும் வகையில், மேலாண்மைக் குழுவில், இணை அமைப்புகளின் பிரதிநிதிகள், குறைந்தது 12 பேர் இடம்பெற்றிருக்கவேண்டும்; தனிநபர்கள் அதிகபட்சம் 9 பேர் இடம்பெற்றிருக்கலாம்.

	- தற்போது, ஆண்டுப் பொதுக்கூட்டம் அன்று, தனிநபர்கள் தங்கள் அடையாள அட்டையைக் காண்பித்து பதிந்துகொள்ளலாம். ஆனால், இணை அமைப்புகள் தங்களது பிரதிநிதிகள் குறித்த விவரங்களை, ஆண்டுப் பொதுக்கூட்டத்திற்கு ஒரு வாரம் முன்னதாகவே பதிந்துகொள்ளவேண்டும். மேலும் சமமாக நடந்துகொள்ளும் நோக்கில், இணை அமைப்புகளின் பிரதிநிதிகள், ஆண்டுப் பொதுக்கூட்ட தினத்தன்று பதிந்துகொள்ள அதிகாரத்துவ கடிதம் ஒன்றை பிறப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படலாம்.
5.9	தலைவர், அனைத்து உறுப்பினர்களுக்கும் அவர்களின் கருத்துகளுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டார். அவர்களின் கருத்துகளை பேரவையின் அரசியலைமைப்புச் சட்டத்திற்கான பரிசீலனைக் குழு கருத்தில் எடுத்துக்கொள்ளும் என்றும் அவர் கூறினார். மேலும், அந்தக் குழு கருத்துகளை நாடும் வேளையில், தமது கருத்துகளை அளிக்க முன்வருமாறு திரு மணிமாறனுக்கும் தலைவர் அழைப்பு விடுத்தார்.
5.10	அனைத்து சங்கங்களும் ஒருமித்த நோக்கத்துடன் செயல்பட்டால், தனிநபர் உறுப்பினர்களுக்கான தேவை எழாது என்று திரு உத்திராபதி கருத்துரைத்தார். தமிழர் பேரவை, நடுநிலைத்தன்மையுடன் அனைவருக்கும் சேவையாற்றும் என்று தாம் நம்புவதாக அவர் சொன்னார். அனைத்து சங்கங்களும் ஒன்றிணைந்து ஒருமித்த நோக்கத்துடன் செயல்படும் வரையில், மற்ற வகையிலான உறுப்பினத்துவம் அவசியமாகிறது.
5.11	ஒட்டுமொத்தத்தில், தமிழர் பேரவை சிறப்பாக செயல்பட்டு வருவதாகவும், அதன் தலைவர் நன்கு அமைப்பை வழிநடத்தி வருவதாகவும், திரு இளங்கோவன் குறிப்பிட்டார். ஆனால், ஒரு பிரச்சினை குறித்து கருத்து எழுப்பப்படும்போது, அது குறித்த நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகவும், பின்னர் அதே பிரச்சினை மீண்டும் தலைதூக்குவதாகவும் திரு இளங்கோவன் குறிப்பிட்டார். எந்தப் பள்ளிக்கூடங்களில் தமிழ் ஒரு பாடமாக வழங்கப்படுகிறது என்பதைக் கண்டறிவதில் பெற்றோர் தொடர்ந்து சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். முன்னர், அது குறித்த விவரப் பட்டியலை, தமிழர் பேரவை தன் இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்தது. ஆனால், இப்போது அந்தப் பட்டியல் அங்கு இல்லை. ஆக, தமிழர் பேரவை தொடர்ந்து இந்த விவரங்களை தம் இணையத்தளத்தில் வெளியிடவேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார். அப்போதுதான், உறுப்பினர்கள் இணையத்தளத்தின் மூலம், இந்தத் தகவல்களைப் பெற்று பயன்பெறலாம். மேலும், பேரவையின் வரவுசெலவுக் கணக்குகள், வெளித் தணிக்கையாளர்களுக்கு மாதந்தோறும் அனுப்பப்பெற்று வந்தால், தணிக்கை அறிக்கையில் தாமதம் ஏற்பட வாய்ப்பு இருக்காது.
5.12	மேற்படி கேள்விகள் ஏதும் இல்லாத காரணத்தால், ஆண்டு அறிக்கை உறுதிசெய்யப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதனை, திரு ஹரிகிருஷ்ணன் முன்மொழிந்தார்; திரு கிருஷ்ணசாமி வழிமொழிந்தார்.
6	**2018-ஆம் ஆண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட வரவுசெலவுத் திட்ட அறிக்கையை உறுதிப்படுத்தி, ஏற்றுக்கொள்ளுதல்**

6.1	$800 மதிப்புள்ள காலதாமதக் கட்டணம் பற்றி திரு இளங்கோவன் வினவினார். மேம்படுத்தப்பட்ட கட்டுப்பாடுகள் தேவை என்பதை அவர் வலியுறுத்தினார். வரவுசெலவுத் திட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள உபரித் தொகைக்கு, முழுநேர ஊழியர் ஒருவர் இல்லாதது ஒரு காரணமாக இருக்கக்கூடும்.
6.2	முழுநேர ஊழியர் ஒருவர் இல்லாத காரணத்தால், வரவுசெலவுத் திட்ட அறிக்கையை நிறைவு செய்வதிலும், அதனை உள்நாட்டு வருவாய்த் துறை ஆணையத்திடம் சமர்ப்பிப்பதிலும் தாமதம் ஏற்பட்டது. அதனால், தமிழர் பேரவை, உள்நாட்டு வருவாய்த் துறை ஆணையத்திடம் காலதாமதக் கட்டணத்தை செலுத்த நேரிட்டது. ஆணையத்திடம் பேரவை மேல்முறையீடு செய்தது. ஆனால், அந்த மேல்முறையீடு நிராகரிக்கப்பட்டது.
6.3	வரவுசெலவுத் திட்ட அறிக்கை ஏற்றுக்கொள்ளப்படுவதை, திரு இளங்கோவன் முன்மொழிந்தார்; திரு குணசேகரன் வழிமொழிந்தார்.
7	**வாக்களிப்பு செயல்முறைகளை நடத்துவதற்காக (4) தேர்தல் அதிகாரிகளைத் தேர்ந்தெடுத்தல்**
7.1	கூட்ட நிரலில் உள்ள 10-ஆவது அம்சம் கலந்து ஆலோசிக்கப்படும் வரையில், இதனை ஒத்தி வைக்க உறுப்பினர்கள் ஒப்புக்கொண்டனர்.
8	**2019-ஆம் ஆண்டு முதல் 2021-ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்திற்குரிய மேலாண்மைக் குழுவைத் தேர்ந்தெடுத்தல்**
8.1	கூட்ட நிரலில் உள்ள 10-ஆவது அம்சம் கலந்து ஆலோசிக்கப்படும் வரையில், இதனை ஒத்தி வைக்க உறுப்பினர்கள் ஒப்புக்கொண்டனர்.
9	**2019-ஆம் ஆண்டு முதல் 2021-ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்திற்குரிய 2 உள் தணிக்கையாளர்களை, மேலாண்மைக் குழுவிற்கு நியமித்தல்**
9.1	அடுத்து வரவிருக்கும் மேலாண்மைக் குழுவிற்கு, ஆண்டுப் பொதுக் கூட்டத்திற்குப் பின்னர் நடைபெறும் அதன் முதல் கூட்டத்தில், உள் தணிக்கையாளர்களை நியமிப்பதற்கான அதிகாரம் வழங்கப்படவேண்டும் என்று தலைவர் கேட்டுக்கொண்டார்.
9.2	தலைவரின் வேண்டுகோளை ஏற்கவேண்டும் என்று, திரு மசூது முன்மொழிந்தார்; திரு ஹரிகிருஷ்ணன் வழிமொழிந்தார்.
10	**2019-ஆம் ஆண்டு முதல் 2021-ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்திற்குரிய வெளித் தணிக்கையாளர்களின் நியமனத்தை உறுதிப்படுத்துதல்**
10.1	'M/s AAA Assurance PAC' நிறுவனத்தை, 2020/2021 ஆண்டுக்கான பேரவையின் வெளித் தணிக்கையாளராகத் தொடர மேலாண்மைக் குழு ஒப்புதல் அளித்திருப்பதாக தலைவர் தெரிவித்தார். ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் உள்ள

	உறுப்பினர்கள் அதுபற்றிய கருத்தைத் தெரிவிக்கவேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.
10.2	தற்போதைய தணிக்கையாளர்களுக்கான கட்டணத் தொகை அதிகரித்திருப்பதை திரு மணிமாறன் சுட்டினார். அதனால், அதே நிறுவனத்தின் சேவைகளைத் தொடரவேண்டிய அவசியம் உள்ளதா என்று அவர் வினவினார்.
10.3	இலாப நோக்கமற்ற அமைப்புகளுக்கான தணிக்கை சேவை தொடர்பான சட்டதிட்டங்களில் பல மாற்றங்கள் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும், அவை கடுமையாகப் பின்பற்றப்படுவதைத் தணிக்கையாளர்கள் உறுதிசெய்யவேண்டும் என்றும் திரு ஹரிகிருஷ்ணன் விளக்கினார். அதிகாரிகள், இலாப நோக்கமற்ற அமைப்புகளின் வரவுசெலவுக் கணக்குகள் தணிக்கை செய்யப்படும் முறைகளை அணுக்கமாகவும் கண்காணித்து வருகின்றனர். ஆக, அவற்றுடன் ஒப்பு நோக்க, கட்டணங்களில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பு பெரிய தொகை அன்று.
10.4	மேலாண்மைக் குழு, மூன்று விலைப் பட்டியல்களைப் பெற்றதாகவும், அதே தணிக்கையாளர்களைத் தக்கவைத்துக்கொள்வதற்கான முடிவு மேலாண்மைக் குழுவால் எடுக்கப்பட்டது என்றும் தலைவர் உத்தரவாதம் அளித்தார். மேலும், பொதுவாகவே, தணிக்கையாளர்கள் இலாப நோக்கமற்ற அமைப்புகளைத் தணிக்கை செய்ய முன்வருவதில்லை. ஆதலால், தெரிவுகள் குறைவாகவே உள்ளன.
10.5	2020/2021 காலகட்டத்திற்கான தமிழர் பேரவையின் வெளித் தணிக்கையாளராக, 'AAA Assurance PAC' நியமிக்கப்படுவது உறுதிசெய்யப்பட்டது. அதனை, திரு ஃபாரியுல்லா முன்மொழிந்தார்; திரு ஏ கே லெக்ஷ்மணன் வழிமொழிந்தார்.
11	**<u>பொதுச் செயலாளரிடம், குறைந்தது 3 நாட்களுக்கு முன்னர் வரையில் எழுத்துபூர்வ முறையில் தெரிவிக்கப்பட்ட வேறு சில அலுவல்களைக் கலந்து ஆலோசித்தல்</u>**
11.1	தமிழர் பேரவையின் அரசியலைமைப்புச் சட்டத்தில் இடம்பெற்றுள்ள ஷரத்து 9.6.5-இற்கு இணங்க, ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் கலந்து ஆலோசிக்கப்படுவதன் பொருட்டு, பல தீர்மானங்கள் கிடைக்கப்பெற்றதாக, தலைவர் தெரிவித்தார். (I) மகாத்மா காந்தி நினைவு மண்டபம் (பிற்சேர்க்கை 'ஆ' & 'இ')
11.2	மகாத்மா காந்தி நினைவு மண்டபம் அறங்காவலர் திட்டத்திற்கு முன்மொழியப்பட்டிருப்பதாகவும், அக்கட்டடம் இந்திய / தமிழ்ச் சமூகத்திற்கு சொந்தமானது என்பதால், தமிழர் பேரவையே அதனை நிர்வகிப்பதற்கு மிகச் சிறந்த அமைப்பாகும் என்றும் திருவள்ளுவர் தமிழ் வளர்ச்சிக் கழகத்தைச் சேர்ந்த திரு சிவனேசன் கூறினார். திரு ஜுமாபாய், திரு பி கோவிந்தசாமி பிள்ளை, திரு பக்கிரிசாமி உள்ளிட்ட பல இந்தியர்கள் (பெரும்பாலும் தமிழர்கள்) அக்கட்டடத்திற்காக நிதிகள் கொடுத்து உதவியுள்ளனர். இந்தியர்களுக்குச் சொந்தமான அரசுக் கட்டடம் அது. பல தருணங்களில், தனிநபர்கள், அக்கட்டடத்தை ஆக்கிரமிக்க முயன்றுள்ளனர். தற்போது, இந்திய மரபுடைமை

	நிலையம் அக்கட்டடத்தை தமது சொந்த விவகாரங்களின் பேரில் நிர்வகிக்கவிருப்பதாக, நான் அறிகிறேன். அந்தக் கட்டடம் தமிழ்ச் சமூகத்திடம் ஒப்படைக்கப்படவேண்டும் என்ற கருத்து அமைச்சர்களிடம் முன்வைக்கப்பட்ட போதிலும், அதனை இந்திய மரபுடைமை நிலையத்தின் கீழ் நிர்வகிப்பதற்கான முடிவு எடுக்கப்பட்டுவிட்டதாக பதிலளிக்கப்பட்டது. அது முறையல்ல அல்ல என்று, அக்கட்டடம் தமிழ்ச் சமூகத்திடம் ஒப்படைக்கப்படவேண்டும் என்றும் திரு சிவனேசன் வலியுறுத்தினார். அக்கட்டடத்தை முறையே பொறுப்பேற்று நிர்வகிப்பதற்கான சிறந்த அமைப்பு, தமிழர் பேரவையே. நாம் அனைவரும், அந்தக் கட்டடத்திற்காக அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளவேண்டும் என்று திரு சிவனேசன் கூறினார். அது தொடர்பில் சில அடித்தளப் பணிகள் தொடங்கப்பட்டுவிட்டன. தமிழர் பேரவையும் அதன் இணை அமைப்புகளும், இதன் தொடர்பில் எந்த அளவுக்கு கடப்பாடு கொண்டுள்ளன என்பதைத் தெரிந்துகொள்ள அவர் விருப்பம் தெரிவித்தார்.
11.3	அதே அம்சம் குறித்து, வாழ்நாள் உறுப்பினரான திரு உத்திராபதி கேள்வி எழுப்பினார். பல ஆண்டுகளாக நாம் குறிப்பிட்ட சில விஷயங்களைப் பற்றிப் பேசி வருகின்ற போதிலும், அவற்றின் பொருட்டு, எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளவில்லை என்பது வருத்தமளிப்பதாக அவர் சுட்டினார். அக்கட்டடத்தை தமிழ்ச் சமூகத்திற்குப் பெற்றுத் தருவதற்கு, நாம் அனைவரும் ஒன்றிணைந்து முயற்சி மேற்கொள்ளவேண்டும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார். பல ஆண்டுகளாக, நமக்கென்று ஒரு கட்டடம் வேண்டும் என்று பேசிக்கொண்டிருக்கிறோமே தவிர, அதன் தொடர்பில் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.
11.4	2002-ஆம் ஆண்டில், தமிழர் பேரவை அதன் சொந்தக் கட்டடம் கொண்டிருப்பது பற்றி கலந்துரையாடல் இடம்பெற்றதை திரு கலைச்செல்வன் நினைவுகூர்ந்தார். தற்போது, நாம் 2019-ஆம் ஆண்டில் இருக்கிறோம். நமக்கென்று ஒரு கட்டடம் இருப்பதற்கான முயற்சிகள் எவற்றையும் நாம் இன்னும் பார்க்கவில்லை. தமிழர் பேரவை, இந்தக் கட்டடத்தைப் பெறுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.
11.5	திரு மணிமாறன் இத்தீர்மானத்தை ஆதரித்தார். அடுத்து வரவிருக்கும் மேலாண்மைக் குழு, இதுபற்றி பரிசீலித்து, அதன் முழு ஆதரவை நல்கும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.
11.6	இந்த விவகாரத்தின் தொடர்பில், அதிகாரிகளுக்கும் அரசாங்கத்தின் கருத்தறியும் பிரிவுக்கும் மின்னஞ்சல் அனுப்பியிருப்பதாக, திரு தமிழ்மறையான் தெரிவித்தார்.
With that in mind, I have spent the past 6 months or so in identifying some younger members, speaking to them and persuading them to come on board and serve the community. Later I would be introducing a number of new and young candidates who are standing for election. They are known to us to a certain extend and their commitment to the Tamil language and Tamil community cannot be doubted. If elected, I am confident that they would make a difference to the way we think and organize with their fresh and innovative thoughts and ideas.

Hopefully through these youths acting as ambassadors, we may get more youths to come forward and, in the end, TRC hopes to channel some of them to the affiliates where they could then be mentored and trained to succeed all of us eventually. You would be surprised by their passion for the language and community and their thirst to make a difference. Let us today create that opportunity.

Language and Education

I am hoping for TRC to focus more on issues we face in respect of our language and the educational status of our community. There have been instances where parents and students have been told to take up other languages rather than Tamil; Exams being held close to major festivals like Deepavali; Use of inappropriate words in the mainstream media; errors in translations at public areas etc. There could be other issues, which we may not know. I assure you that we have been quietly looking into such matters when it is brought to our attention. We do not go around boasting or publicizing them. But if the matter is brought to our attention, we will listen and act as necessary and continue to do so.

Community Engagement

TRC has always been maintaining a close relationship with major organizations like SINDA, LISHA, PA, SICCI, HEB etc. Now through the Youth Wing we have expanded to others like YSA, Tertiary Institutions etc. DPM during his NDD speech encouraged us to look further and engage the non-Indian community organisations. We intend to do that.

Engaging and working with such community organisations will broaden our reach and the type of assistance and support we could give. We may be able to reach out to more Tamils through such outreach programmes.

Language is not the only issue that we face. There are many others – social problems like family violence, drug abuse, criminal offenders, divorces; financial issues like unemployment, retrenchment, low- or no-income families; issues that arise due to more expatriates coming to Singapore.

I do not think that many issues are only unique to us. Other community may also face them. By working together, we hope to identify common problems and solutions by sharing and uniting our resources. By this, we hope for a better life for our very own community.

Early this year, TRC organized its retreat to identify areas that we could focus on and the challenges that we face. I am thankful to those affiliates, which supported the retreat and joined us in the discussions. My only regret is that this number was small. The large majority of our affiliates were unable to join us despite being given advance notice and TRC willing to subsidize half the cost. It is easy to comment and give feedback from the outside, but it is another to be part of the team, discussing, arguing, and staying together and as one unified team come up with strategies for the future.

Early next year after our Annual Workplan, we hope to meet all our affiliates and share details of the retreat discussion and the workplan initiatives and together work towards achieving the objectives.

In conclusion, let me repeat that we intend to focus on Tamil Language and Education; Community Engagement; Empowering the Youths and Strengthening our Admin and Finance aspects.

The draft amendments to the constitution has been put up to the MC and is going through some edits. Once confirmed, it would be shared with the Affiliates for their views probably in Feb 2020.

In the New Year, we would be engaging you (affiliates) to join our various sub-committees and together identify areas and projects that TRC should undertake.

In 2021, TRC would be celebrating its 70th anniversary with a series of events and we would again engage you in jointly organizing certain events.

Also, we have now expanded our pool of advisors where currently we have Mr Chandra Das and Mr Ravindran. I am pleased to announce that Mr Murali Pillai and Mr Vivehanandhan have both agreed to be our Advisors. We have also approached Mr Vikram Nair and hope that he would also agree.

Finally, I would like to thank all Affiliates and Partner organisations for your support, members of the Management Council for your cooperation and commitment and all Volunteers for your assistance.

Thank you.

Pandiyan Vellasami PBM, PB, PBS
President

தமிழர் பேரவை

Appendix A

FRIENDS & PARTNERS OF TRC

S/No	Name of Organisation
1	Casuarina Curry Restaurant
3	Lee Foundation
4	Lee Kuan Yew Fund for Bilingualism (LKYFB)
5	Little India Shopkeepers & Heritage Association (LISHA)
6	Management Development Institute of Singapore (MDIS)
7	MediaCorp
8	Mini Environment Service Pte Ltd (MES)
9	Modern Montessori International (MMI)
10	Mother Restaurant
11	Narpani Pearavai
12	Singapore Indian Chamber of Commerce and Industry (SICCI)
13	Singapore Indian Development Association (SINDA)
14	Singapore Tamil Teachers Union (STTU)
15	Singapore Tote Board
16	Tamil Language Council (TLC)
17	Tamil Language Learning & Promotion Committee (TLLPC)
18	Tamil Murasu
19	ZEE Tamil

தமிழர் பேரவை

Appendix B

TRC MANAGEMENT COUNCIL (2019 -2021)

S/No	Title of Office	Name
1	President	Mr Pandiyan s/o Vellasami PB, PBS, PBM
2	Deputy President	Mr Sathinathan s/o M R Karuppiah PBM, BBM
3	Vice-President (Administration & Finance)	Mr Tharmaraj s/o N G R Subbiah
4	Vice-President (Education & Language)	Mr A R Mashuthoo
5	Vice-President (Community Engagement)	Mr M Kunaseakanan PBS
6	Vice-President (Youth)	Mr Arun Vasudev Krishnan
7	General Secretary	Mr Subramaniam s/o Kannappan
8	Deputy General Secretary	Mr Narayanan Velayutham
9	Deputy General Secretary	Ms Latheefa Beevi
10	Treasurer	Mr Tam Shanmugam
11	Assistant Treasurer	Ms Illamaran Thamizhkkothai
12	Council Member	Mr Balakrishnan s/o Veerasamy PBM
13	Council Member	Mr Kalaichelvam S/O Veerappan
14	Council Member	Ms Thiruselvi d/o Rajah Gopal
15	Council Member	Mr Manimaran s/o Arumugam
16	Council Member	Mr Mohideen Nizar Anwar
17	Council Member	Mr Perumal Arumai Chandran
18	Council Member	Mr Jothinathan Manickavachagam
19	Council Member	Ms Sharmelee Selvaraj
20	Council Member	Mr AR Subbu Adaikalavan
21	Council Member	Mr M Vikneswaran

தமிழர் பேரவை

Appendix C-1

MANAGEMENT COUNCIL MEETING ATTENDANCE FOR 2019 (JAN - SEPT)

S/NO	POSITION	NAME	09 Jan 2019	13 Mar 2019	21 May 2019	17 SEP 2019	Total
	Immediate Past President	Dr Theyvendran s/o Ramanathan	A	A	A	A	**0/4**
1	President	Mr V Pandiyan	√	√	√	√	**4/4**
2	Dy President	Mr S Vivakanandan	√	A	A	√	**2/4**
3	Vice President	Mr V Balakrishnan	√	√	√	A	**3/4**
4	Vice President	Mr A R Mashuthoo	√	√	√	√	**4/4**
5	Vice President	Mr V Kalaichelvam	√	√	√	√	**4/4**
6	Vice President	Mr K Sathinathan	√	A	√	√	**3/4**
7	Gen Secretary	Mr S Tharmaraj	√	√	√	A	**3/4**
8	Dy Gen Secretary	Ms R G Thiruselvi	A	√	√	A	**2/4**
9	Dy Gen Secretary	Mr M Kunaseakanan	A	√	√	√	**3/4**
10	Treasurer	Ms Illamaran Thamizhkkothai	√	√	A	√	**3/4**
11	Assistant Treasurer	Mr Khader Sultan	A	√	A	√	**2/4**
12	Council Member	Mr Yousuf Rowther Rajid	√	A	√	√	**3/4**
13	Council Member	Mr M Lukshumayeh	A	A	√	A	**1/4**
14	Council Member	Ms Shoba Gunasekaran	A	A	A	A	**0/4**
15	Council Member	Ms Janagi Somu	A	A	A	√	**1/4**
16	Council Member	Mr B G Seeni Jahubar Ghany	A	A	A	√	**1/4**
17	Council Member	Mr S Jegathesan	A	A	A	A	**0/4**
18	Council Member	Mr K Subramaniam	A	A	√	A	**1/4**
19	Council Member	Mr T Durairajoo	√	√	√	A	**3/4**
20	Council Member	Mr Danapal Kumar	√	A	√	A	**2/4**
21	Council Member	Mr Arun Vasudev Krishnan	√	A	√	√	**3/4**

√ Present
A Absent (Apology)
X Absent

தமிழர் பேரவை

Appendix C-2

NEW MANAGEMENT COUNCIL MEETING ATTENDANCE FOR 2019 (NOV – DEC)

S/NO	Position	Name	11 NOV 2019	TOTAL
1	President	Mr Pandiyan s/o Vellasami	√	1/1
2	Deputy President	Mr Sathinathan s/o M R Karuppiah	A	0/1
3	Vice-President (Administration & Finance)	Mr Tharmaraj s/o N G R Subbiah	√	1/1
4	Vice-President (Education & Language)	Mr A R Mashuthoo	√	1/1
5	Vice-President (Community Engagement)	Mr M.Kunaseakanan	√	1/1
6	Vice-President (Youth)	Mr Arun Vasudev Krishnan	√	1/1
7	General Secretary	Mr Subramaniam s/o Kannappan	√	1/1
8	Deputy General Secretary	Mr Narayanan Velayutham	√	1/1
9	Deputy General Secretary	Ms Latheefa Beevi	√	1/1
10	Treasurer	Mr Tam Shanmugam	√	1/1
11	Assistant Treasurer	Ms Illamaran Thamizhkkothai	A	0/1
12	Council Member	Mr Balakrishnan s/o Veerasamy	A	0/1
13	Council Member	Mr Kalaichelvam S/O Veerappan	√	1/1
14	Council Member	Ms Thiruselvi d/o Rajah Gopal	√	1/1
15	Council Member	Mr Manimaran s/o Arumugam	√	1/1
16	Council Member	Mr Mohideen Nizar Anwar	√	1/1
17	Council Member	Mr Perumal Arumai Chandran	A	0/1
18	Council Member	Mr Jothinathan Manickavachagam	A	0/1
19	Council Member	Ms Sharmelee Selvaraj	A	0/1
20	Council Member	Mr AR Subbu Adaikalavan	A	0/1
21	Council Member	Mr M Vikneswaran	A	0/1

√ *Present*
A *Absent (Apology)*
X *Absent*

தமிழர் பேரவை

Appendix D

TRC AFFILIATE ORGANISATIONS (AS AT 31 DEC 2019)

S/NO	Affiliate Name
1	Annamalai University Alumini Association (Singapore Chapter)
2	Association of Singapore Tamil Writers
3	Athipathi International Theatre
4	Ceylon Sports Club
5	Darma Muneeswaran Temple
6	Ivann Productions
7	Jamal Mohamed College Alumni Association (Singapore Chapter)
8	Kavimalai
9	Krishna Our Guide
10	Makkal Kavingar Mandram
11	Mathavi Literary Society
12	Muslim League (Singapore)
13	News Vendors Association
14	Periyar Community Service Singapore
15	Saiva Siddhantha Sangam
16	Sembawang Tamils Association
17	Simplified Kundalini Yoga Society
18	Singapore Ceylon Tamils' Association
19	Singapore Hindu Sabai
20	Singapore Indian Artistes' Association
21	Singapore Kadayanallur Muslim League
22	Singapore Thamizhar Eyakkam
23	Sirpigal
24	Sree Ramar Temple, Changi
25	Sri Guru Ragavendra Society Singapore
26	Sri Muneeswaran Temple
27	Sri Ruthra Kaliamman Temple
28	The Society Of Kalai Pithers
29	Thiruvalluvar Tamil Valarchik Kazhagam
30	Thamizhvel Narpani Mandram
31	Tamil Pattimandra Kalai Kazhagam
32	Umar Pulavar Tamil High School Old Students Association
33	United Indian Muslim Association

தமிழர் பேரவை

1 ஜனவரி 2019 முதல் 31 டிசம்பர் 2019 வரையிலான காலகட்டத்திற்குரிய மேலாண்மைக் குழு அறிக்கை

1 நன்றி நவில்தல்

தமிழர் பேரவையின் நிகழ்ச்சிகளுக்குத் தொடர்ந்து ஆதரவளித்து வரும் ஆலோசகர்கள், இணை அமைப்புகள், பங்காளி அமைப்புகள், நன்கொடையாளர்கள், GIRO வழி நிதி வழங்குவோர், நலன் விரும்பிகள் அனைவருக்கும் பேரவையின் மேலாண்மைக் குழு தனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது.

மேலாண்மைக் குழு, 2019-ஆம் ஆண்டில் நடைபெற்ற தமிழர் பேரவையின் நிகழ்ச்சிகளுக்கு தொடர்ந்து ஆதரவும் தாராளமான நன்கொடைகளும் அளித்து வரும் அதன் நட்பு அமைப்புகளுக்கும் பங்காளி அமைப்புகளுக்கும் *(பிற்சேர்க்கை 'அ')* தமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது.

2 புதிய மேலாண்மைக் குழு அமைப்பு

2019 முதல் 2021-ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்திற்குரிய மேலாண்மைக் குழு, 3 நவம்பர் 2019 அன்று தேர்ந்தெடுக்கப்பட்டது.


2.1 தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய மேலாண்மைக் குழுவின் முழு விவரங்கள் பிற்சேர்க்கை 'ஆ'-வில் இணைக்கப்பட்டுள்ளன.

3 2019 - ஒரு கண்ணோட்டம்

தமிழர் பேரவை ஐந்து நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்திருந்தது. மேலும், இணை அமைப்புகளும் பங்காளி அமைப்புகளும் ஏற்பாடு செய்த பல நிகழ்ச்சிகளுக்கும் பேரவை ஆதரவு வழங்கியது. அத்துடன், பேரவையின் இளையர் அணி, 2019-ஆம் ஆண்டில் 10-க்கும் மேற்பட்ட நிகழ்ச்சிகளை நடத்தியது.

3.1 2019-ஆம் ஆண்டில் தமிழர் பேரவை ஏற்பாடு செய்த நிகழ்ச்சிகளின் கால அட்டவணை

No.	Date	Venue	Event	Target Group/No of Participants
1	ஜனவரி 5	உமறுப் புலவர் தமிழ்மொழி நிலையம்	சமூகக் கல்வி உதவி நிதி விருதுகள் 2019	தொடக்கநிலை மாணவர்களும் பெற்றோரும் / 300
2	ஏப்ரல் 27	உமறுப் புலவர் தமிழ்மொழி நிலையம்	சொற்போர் 2019	தொடக்கநிலை மாணவர்களும் பெற்றோரும் / 300
3	மே 26	பி கோவிந்தசாமி பிள்ளை மண்டபம்	தமிழா தமிழா	பொதுமக்கள் / 500
4	ஆகஸ்டு 31	அடித்தள மன்றம்	54-வது தேசிய தின விருந்து	பெரியவர்கள் / 500
5	அக்டோபர் 12	உமறுப் புலவர் தமிழ்மொழி நிலையம்	மாணவர் முழக்கம்	தொடக்கநிலை மாணவர்களும் பெற்றோரும் / 250



3.2 சமூகக் கல்வி உதவி நிதி விருதுகள் 2019

2000-ஆம் ஆண்டு முதல், தமிழர் பேரவை, தொடக்கநிலை மாணவர்களுக்குக் கல்வி உதவி நிதியை வழங்கி வருகிறது. அப்போது முதல், 30,000-க்கும் அதிகமான மாணவர்கள் பயனடைந்துள்ளனர்; $500,000-க்கும் அதிகமான கல்வி உதவி நிதி வழங்கப்பட்டுள்ளது.



2019-ஆம் ஆண்டில், தமிழை இரண்டாம் மொழியாகப் பயிலும், நிகர குடும்ப வருமானம் மாதந்தோறும் $2,000-க்குக் குறைவாக உள்ள 93 மாணவர்களுக்கு, கல்விக்கான உதவி நிதி வழங்கப்பட்டது. இவர்கள், $150 முதல் $300 வரையிலான உதவி நிதியைப் பெற்றனர். மொத்தம் $12,870 மதிப்புடைய உதவி நிதி, மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.

5 ஜனவரி 2019 அன்று, உமறுப் புலவர் தமிழ்மொழி நிலையத்தில், கல்வி உதவி நிதி விருதுகளுக்கான நிகழ்ச்சி வெற்றிகரமாக நடந்தேறியது. திரு. சீ ஹொங் டாட் நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார்.



தலா $1,000 நன்கொடை வழங்கிய திரு மஹாதேவன் லக்ஷ்மய்யா, திரு சுப்பிரமணியம் கண்ணப்பன், திரு குமரன் நடராஜன், திரு பூபாலன் ராஜேஸ்வரன் ஆகியோருக்கு எங்கள் நன்றிகள் உரித்தாகுக. விருதுகள் அவர்களின் பெயரில் அல்லது அவர்களின் அன்புக்குரியவர்களின் பெயர்களில் வழங்கப்பட்டன.

3.3 சொற்போர் 2019

தமிழர் பேரவை

சொற்போர் – ஈராண்டுக்கு ஒரு முறை, தமிழர் பேரவையால் நடத்தப்படும், தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கான, தேசிய தமிழ் விவாதப் போட்டித் தொடர். தமிழ்மொழி விழாவின் ஓர் அங்கமாக நடத்தப்படும், இந்தப் போட்டி, 2009-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது ஒரு முக்கிய நிகழ்வாக தொடர்ந்து விளங்குகிறது. தற்போது ஆறாவது முறையாக நடத்தப்பட்டு வரும் இந்தப் போட்டியில், இம்முறை 18 பள்ளிகள் பங்கெடுத்தன.



மூன்று நிலைகளிலான (ஆயத்தம், ஆக்கம், படைப்பு) அணுகுமுறையைக் கையாளும் வகையில், இந்த விவாதத் தொடர் மாணவர்களுக்கான பயிற்சியில் கூடுதல் கவனம் செலுத்தியது. போட்டி முழுவதும், விவாதத்திற்கான அத்தியாவசியத் திறன்களை மாணவர்களிடையே விதைக்க, மொழியிலும் விவாதத்திலும் தேர்ச்சி பெற்றவர்கள், பங்கேற்பாளர்களுக்கு போதுமான பயிற்சிகளை நடத்தி வந்தனர். முறையான உத்திமுறைகளைக் கற்றறிந்த மாணவர்கள், போட்டிகளுக்குத் தயார் செய்ய, மேற்படி ஊக்குவிக்கப்பட்டனர். 27 ஏப்ரல் 2019 அன்று உமறுப் புலவர் தமிழ்மொழி நிலையத்தில் நடந்த மாபெரும் இறுதிச் சுற்றுக்கு, அதுவே வழிவகுத்தது.

இந்த விவாதப் போட்டித் தொடருக்கு, வளர்தமிழ் இயக்கம், தமிழ்மொழி கற்றல் வளர்ச்சிக் குழு, லீ குவான் யூ இருமொழிக் கொள்கைக்கான நிதி ஆகியவை ஆதரவளித்தன. மேலும், தமிழர் பேரவை, இந்திய ஊடக நிறுவனமான ZEE தமிழ் தொலைக்காட்சியின் சிங்கப்பூர் அலுவலகத்துடன் இணைந்து, இப்போட்டிக்கு ஏற்பாடு செய்தது. அதன்மூலம், 'சொற்போர் 2019' பல்வேறு ஊடகங்களின் வழி, விரிவான மக்கள் வட்டத்திற்கு ஒளிபரப்பப்பட்டது. செம்பவாங் குழுத் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்மொழி கற்றல் வளர்ச்சிக் குழுவின் தலைவருமான திரு விக்ரம் நாயர், நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார்.

3.4 தமிழா தமிழா

சராசரி மனிதர்களின் வாழ்க்கையில் நிகழும் பிரச்சினைகளைப் பற்றி அலசி ஆராயும் ஒரு கலந்துரையாடல் நிகழ்ச்சி - தமிழா தமிழா. இந்தியாவில் உருவெடுத்த இந்த நிகழ்ச்சி, உலகளவில் பலராலும் பாராட்டப்பெற்று வருகிறது. பிரபல திரைப்பட இயக்குநரும், எழுத்தாளரும் நடிகருமான திரு கரு பழனியப்பன் அவர்களால் வழிநடத்தப்படும் இந்தக் கலந்துரையாடல் தொடர், இரண்டு அம்சங்களுக்காகப் போற்றப்படுகிறது - தமிழ், உண்மை.



பொதுவாக, இந்தியாவில் வாழும் மக்களை பாதிக்கும் பல அம்சங்கள் குறித்து விவாதித்த இத்தொடர், அனைத்துலக அரங்கில் தடம் பதிக்க, சிங்கப்பூரில் முதல் அடி எடுத்து வைத்துள்ளது. இதன்மூலம், உலகத் தமிழர்கள் சார்ந்த விஷயங்களை அலசி ஆராயும் கருத்துக் களமாக உருவெடுக்க, இந்த நிகழ்ச்சி எண்ணம் கொண்டுள்ளது.



தமிழா தமிழா – புதிய பரிணாமத்தில் அடியெடுத்தும் வைக்கும் இந்த நிகழ்ச்சிக்கு, தமிழர் பேரவையும், ZEE தமிழ் (சிங்கப்பூர்) தொலைக்காட்சியும் இணைந்து ஏற்பாடு செய்தன. பலதரப்பட்ட பின்னணிகளைச் சேர்ந்த 600-க்கும் அதிகமானோர் இதில் கலந்துகொண்டனர். சிங்கப்பூர் இந்திய வர்த்தகத் தொழிற்சபையின் தலைவரான, முனைவர் டி சந்துரு, நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார்.

3.5 54-வது தேசிய தின விருந்து 2019

ஆண்டுதோறும் நடத்தப்படும் இந்த விருந்து நிகழ்ச்சி, ஆகஸ்டு 31-ஆம் தேதி, அடித்தள மன்றத்தில் நடைபெற்றது. துணைப் பிரதமரும் நிதி அமைச்சருமான திரு ஹெங் சுவீ கியாட், நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார்.

நிகழ்ச்சியில், சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீக்கின் முன்னாள் தலைவரும் தற்போதையஆலோசகருமான திரு நசீர் கனி அவர்களுக்குத் தமிழர் பேரவையின் சமூக சேவை விருது வழங்கப்பட்டது. மூத்த கல்வியாளரான திரு நசீர் கனி, இந்திய சமூகத்திற்கும், சிங்கப்பூருக்கும் பல்வேறு வழிகளில் சேவையாற்றியுள்ளார்.



தமிழர் பேரவையும் அதன் இளையர் அணியும் இணைந்து உருவாக்கிய குறி.sg, சமூக செயலியை, துணைப் பிரதமர் ஹெங் அதிகாரப்பூர்வமாகத் துவக்கி வைத்தார்.

ஆண்டுதோறும் நடத்தப்படும் இந்த விருந்து நிகழ்ச்சி, நிதி திரட்டும் நிகழ்ச்சியாகவும் விளங்கி வருகிறது. இதில் 500-க்கும் அதிகமானோர் கலந்துகொண்டனர்.

சிங்கப்பூரின் இருநூற்றாண்டு நிறைவைக் கொண்டாடும் கண்காட்சி ஒன்றையும் துணைப் பிரதமர் ஹெங் பார்வையிட்டார்.

3.6 மாணவர் முழக்கம்

'அனைத்துலக மாணவர் முழக்கம்' போட்டித் தொடரை ஒட்டி, சிங்கப்பூரில் 'மாணவர் முழக்கம்' 12 அக்டோபர் 2019 அன்று, உமறுப் புலவர் தமிழ்மொழி நிலையத்தில் நடைபெற்றது. மலேசியாவின் ஆஸ்ட்ரோ தொலைக்காட்சியும், வணக்கம் மலேசியாவும் இணைந்து நடத்தும் 'அனைத்துலக மாணவர் முழக்கம்' போட்டித் தொடருக்கான முன்னோட்டமாக, சிங்கப்பூர் போட்டிகள் நடைபெற்றன. அனைத்துலக சுற்றுகளுக்கு, சிங்கப்பூரைப் பிரதிநிதிக்கக்கூடிய தலைசிறந்த 3 போட்டியாளர்களைத் தெரிவு செய்யும் நோக்கில், இது நடத்தப்பட்டது.

சொற்போர் 2019-இல் பங்குபெற்ற போட்டியாளர்களில், தலைசிறந்த 45 மாணவர்கள், சிங்கப்பூர் மாணவர் முழக்கத்தில் பங்கெடுப்பதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அதனை அடுத்து, ஐந்து

அங்கங்களாக நடைபெற்ற பயிலரங்குகளிலும் பயிற்சி வகுப்புகளிலும் 28 மாணவர்கள் கலந்துகொண்டு தங்களது பேச்சாற்றலையும் விவாதிக்கும் திறனையும் மேம்படுத்திக்கொண்டனர். இறுதியாக, சிங்கப்பூரில் நடைபெற்ற போட்டியில் 18 மாணவர்கள் கலந்துகொண்டு, இறுதிச் சுற்று வரை களம் காண்பதற்கான முயற்சியில் அடியெடுத்து வைத்தனர். சிங்கப்பூர் போட்டி, ஒரே நாளில் நடந்து முடிந்தது.

கடுமையான விவாதங்களுக்குப் பின்னர், நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட, ஸ்ரீ விநாயகா எக்ஸ்போர்ட்ஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர், திரு ஜோதி மாணிக்கவாசகம், இறுதிச் சுற்று வரை போட்டியிட்ட 5 மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கினார்.





3.7 தமிழர் பேரவையின் இளையர் அணி

மாத்தி யோசி



தேசிய அளவில் எடுக்கப்பட்ட முதல் கணக்கெடுப்பு (தேவைகளை கண்டறிதல்) குறித்து கலந்துரையாடுவதற்காக இருமொழியில் நடைபெற்ற இந்த இளையர் கருத்தரங்கு, 10 ஜனவரி 2019 அன்று MDIS அரங்கத்தில் நடைபெற்றது. இளையர்களின் அக்கறைக்குரிய அம்சங்கள் பற்றி கலந்துரையாடலில் விவாதிக்கப்பட்டது. அதன்பின்னர், 13 பரிந்துரைகள் உருவாக்கப்பட்டு, சமூகத் தலைவர்களிடம் பகிர்ந்துகொள்ளப்பட்டன. இதுவரை 11 பரிந்துரைகள் அமல்படுத்தப்பட்டுள்ளன.

தமிழர் பேரவை

வணிக வேட்டை









இந்திய சமூகத்திற்காக நடத்தப்பட்ட முதல் நீண்ட நெடிய தொழில்முனைப்புத் திட்டம் இது. 5 மாதம் நீடித்த பயிலரங்குகள், பயிற்சி வகுப்புகள், தொடர்புக் கட்டமைப்புகள் ஆகியவை, மாபெரும் இறுதிச் சுற்றுக்கு வழிவகுத்தன. அங்கு, குழுக்கள் தங்களது திட்டங்களைப் படைத்தனர். MDIS அரங்கத்தில், 22 ஜூன் 2019 அன்று நடைபெற்ற இந்த இறுதிச் சுற்று, நமது இந்திய இளையர்களுக்கான தனித்துவம் வாய்ந்த வாய்ப்புகளை அமைத்துக் கொடுத்தது; இடர்களை எதிர்கொள்ளும் அவர்களது எண்ணப்போக்கை பக்குவத்தை மேம்படுத்தியது. போட்டியின் நடுவர்களாகக் கலந்துகொண்ட திருமதி சரோஜினி பத்மநாதன், திரு பிரவீன் ஆகியோர், நிகழ்ச்சியின் புத்தாக்கம் குறித்து பாராட்டினர். இந்த நிகழ்ச்சிக்குக் கிடைத்த பேராதரவின் காரணமாக, 'வணிக வேட்டை' 2020-ஆம் ஆண்டில், ஒரு பயிலரங்காக மீண்டும் அரங்கேறும். 'வணிக வேட்டை' நிகழ்ச்சியானது, நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் தமிழ் இலக்கிய மமன்றத்துடன் நடைபெற்ற கூட்டு முயற்சியாகும்.



என்ன மைக்?

பலவகைத் திறன்களைக் கொண்ட இளையர்களுக்காகத் தமிழில் ஏற்பாடு செய்யப்பட்ட முதல் நிகழ்ச்சி இது. இரண்டு அமர்வுகளாக நடைபெற்ற இந்த நிகழ்ச்சி, தேசிய நூலக வாரியத்தின் இளம் எழுத்தாளர் வட்டத்துடன் இணைந்து நடத்தப்பட்டது. இரண்டு அமர்வுகளிலும், 130 பேர் கலந்துகொண்டனர். 26 இளையர்கள் பல்வேறு திறன்களை வெளிப்படுத்தினார்கள்: கவிதை, நடனம், பாடல், மாயாஜாலம் முதலானவை. இயல்பான சூழலில் அமைந்த இந்த நிகழ்ச்சி இளையர்களுக்குப் பிடித்திருந்தது. இளையர்கள் தங்கள் படைப்புகளை பதிவேற்றம் செய்வதற்கும், விமர்சனங்களுக்கு உட்படுத்தப்படாத ஒரு பாதுகாப்பான சூழலைக் கொண்டிருப்பதற்கும் ஏதுவாக இணையத்தளம் ஒன்றும் துவங்கப்பட்டது.

தமிழர் பேரவை

Candid Confessions

ஒரு சமூகமாக, நாம் சிரமமான, புறக்கணிக்கப்பட்ட அம்சங்கள் பற்றிப் பேசுவதற்கு முன் வருவதில்லை என்று பல இளையர்கள் கருதினர். அதனைக் கருத்திற்கொண்டு, தமிழர் பேரவையின் இளையர் அணியும், தேசிய இளையர் மன்றத்தின் Young Change Makers திட்டமும், இளம் சீக்கியர் மன்றத்துடன் இணைந்து ஒரு கலந்துரையாடலுக்கு ஏற்பாடு செய்தன - Candid Confessions (பாகம் 1). பல அம்சங்கள் குறித்து திறந்த, வெளிப்படையான கலந்துரையாடலை நடத்துவது இந்த நிகழ்ச்சியின் நோக்கம். முதல் அமர்வில் இனவாதம் குறித்து கலந்துரையாடப்பட்டது. ஒருங்கிணைந்த சிங்கப்பூர் சமூகத்தை உருவாக்க எண்ணம் கொண்டிருந்த காரணத்தால், இந்தக் கலந்துரையாடலில் அனைத்து இனத்தவரும் கலந்துகொள்ள அனுமதிக்கப்பட்டது. SCAPE வளாகத்தில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில், பல்வேறு இனங்களைச் சேர்ந்த சுமார் 30 பேர் கலந்துகொண்டனர். கலந்துரையாடல் இருவழியில் அமையப்பெறவேண்டும் என்பதற்காக, குழுக் கலந்துரையாடல்களில், உணர்வுகளைக் கண்காணிக்கவேண்டி, சிறப்புப் பேச்சாளர்கள் அமர்த்தப்பட்டனர்.






iFolks

தலைமுறை இடைவெளியைக் குறைக்கும் நோக்கத்தில், திறன்பேசி செயலிகளை பயன்படுத்துவது தொடர்பில் மூத்தோருக்கு ஏற்பாடு செய்யப்பட்ட பயிலரங்கே, 'iFolks'. இந்தப் பயிலரங்கில் கலந்துகொண்ட மூத்தோர், திறன்பேசிகளைப் பயன்படுத்தும் முறைகள் குறித்து கற்றுக்கொண்டனர். 8 டிசம்பர் 2019 அன்று நடந்த முதல் பயிலரங்கு, உட்லண்ட்ஸ் சமூக மன்றத்துடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த நிகழ்ச்சியை, மூத்தோர் பலரும் ஒன்றுகூடவல்ல ஆலயங்கள், தேவாலயங்கள், பள்ளிவாசல்கள் ஆகிய இடங்களுக்கு விரிவுபடுத்த திட்டங்கள் உள்ளன. நிகழ்ச்சி பற்றி ஆக்ககரமான கருத்துகள் தெரிவிக்கப்பட்டன.




தமிழர் பேரவை

சேவா தினம் 2019

10 ஆகஸ்டு 2019 அன்று, ராடின் மாஸ் தொகுதியில் உள்ள வசதி குறைந்தவர்களின் இல்லத்தைத் துப்புரவு செய்யும் பணியில், இளம் சீக்கியர் மன்றத்துடன் இணைந்து தமிழர் பேரவை இளையர் அணியும் ஈடுபட்டது. தமிழர் பேரவை இளையர் அணி உறுப்பினர்கள், வீடுகளைத் துப்புரவு செய்ததுடன், சமூகத்தின் சவால்களையும் பிரச்சினைகளையும் பற்றி அறிந்துகொண்டனர்.





சிண்டா - Door Knocking திட்டம்

ஒருங்கிணைப்பிலும் ஒத்துழைப்பிலும் தமிழர் பேரவையின் இளையர் அணி, ஆழ்ந்த நம்பிக்கை கொண்டுள்ளது. ஆக, நம்முடைய சமூக சேவைத் திட்டம் என்று ஒன்றை புதிதாக உருவாக்காமல், சிண்டாவின் திட்டங்களுக்கு ஆதரவளித்தது. இந்த வகையில், வளங்கள் விரயமாகாமல், முயற்சிகள் அதிகபட்ச பலன்களைத் தருகின்றன.

நாள் : 25 மே 2019
இடம் : இயோ சூ காங்
பங்கேற்பாளர்கள் : 20 பேர்

குறி.SG

நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களுக்கும் பொதுமக்களுக்கும் இடையில் உள்ள தகவல் இடைவெளியை நிவர்த்தி செய்யும் நோக்கில், சமூகத்திற்காக தமிழர் பேரவை இளையர் அணியால் வடிவமைக்கப்பட்ட சமூகச் செயலியே இது. இந்தச் செயலியில் பல புதிய அம்சங்கள் உள்ளன: நிகழ்ச்சிகளுக்கான நினைவுறுத்தல்கள், நிகழ்ச்சிகளுக்கான வருகைப் பதிவை முன்கூட்டியே தெரிவித்தல், Google நாள்காட்டியுடன் ஒருங்கிணைத்துக்கொள்ளுதல், தேசிய நூலக வாரியத்தின் புதிய நூல்களுக்கான பரிந்துரைகள், இணையவழி மின்-புத்தகக் களஞ்சியம், புதிய கலைஞர்களைப் பற்றிய தகவல்கள். இந்தச் செயலி, கட்டாயமாக மேலும் மேம்படுத்தப்படும் என்பது திண்ணம். துணைப் பிரதமர் ஹெங் உள்ளிட்ட சமூகத்தில் உள்ள பலரும் இந்த முயற்சியைப் பாராட்டியுள்ளனர். அடித்தள மன்றத்தில் நடைபெற்ற தேசிய தின விருந்து 2019-இல் கலந்துகொண்ட திரு ஹெங், அதிகாரப்பூர்வமாக இந்தச் செயலியைத் துவக்கி வைத்தார்.







தமிழர் பேரவை

அமைச்சர்நிலைக் கலந்துரையாடல்: டாக்டர் ஜனில் புதுச்சேரி

24 ஜனவரி 2019 அன்று கல்சாவில் நடைபெற்ற கலந்துரையாடலில், இந்திய சமூகம் குறித்த பல அம்சங்கள் பற்றியும், இந்திய சமூகம் குறித்த கண்ணோட்டம் பற்றியும் கலந்துரையாடினோம். இனவாதம், சிறுபான்மை இனத்தவருக்குரிய பிரச்சினைகள் மட்டுமின்றி, மலேசியாவிற்கும் சிங்கப்பூருக்கும் இடையிலான நிலப் பிரச்சினை குறித்தும் அங்கு பேசப்பட்டது.

அமைச்சர்நிலைக் கலந்துரையாடல்: திரு சான் சுன் சிங்

சுறுசுறுப்பான இயக்கத்தன்மையைத் தக்கவைத்துக்கொள்ளுதல்: 100 பங்கேற்பாளர்கள்; 30 பேர் தொழில்நுட்பக் கழகத்தைச் சேர்ந்த 30 பேர் கலந்துகொண்டனர்; 31 ஆகஸ்டு 2019 அன்று கல்சாவில் நடைபெற்றது. அவர்கள் தங்கள் யோசனைகளை, செய்தித்தாளில் இடம்பெறும் தலையங்க பாணியில் படைத்தனர். அமைச்சர் தம்முடைய சொந்த அனுபவங்களையும் சிந்திக்கத்தக்க கேள்விகளையும் கொண்டு, பங்கேற்பாளர்களை ஈடுபடுத்தினார். பங்கேற்பாளர்கள் அதனை பெரிதும் வரவேற்றனர். பலதரப்பட்ட அம்சங்கள் கலந்துரையாடப்பட்டன. இந்தக் கலந்துரையாடல், ஆங்கிலத்தில் நடைபெற்றது; அனைத்து இனத்தவருக்கும் அனுமதி வழங்கப்பட்டது.

வருடாந்திர பணித்திட்டக் கருத்தரங்கு 2019: Coddiwomple

வருடாந்திர பணித்திட்டக் கருத்தரங்கு சாங்கி உல்லாச விடுதியில் நடந்தது. 14 டிசம்பர் 2019 அன்று, ஒரு நாள் முழுவதும் நடைபெற்ற அந்த நிகழ்வில், உறுப்பினர்களுக்கு புத்துணர்வளித்தல், 2019 நிகழ்வுகளை நினைவுகூர்ந்து மதிப்பீடு செய்தல் ஆகியவற்றில் கவனம் செலுத்தப்பட்டது. இளையர் அணியின் செயல்பாடுகள், தலைமைத்துவம் ஆகியவை பற்றியும் கருத்துரைக்க நிகழ்வு வழிவகுத்தது. சேகரிக்கப்பட்ட கருத்துகளில் சில, 2020-ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டன. பன்முகப்படுத்தப்பட்ட அமைப்புமுறை, தொடர்புத் தளங்களையும், அறிக்கைகள் சமர்ப்பிப்பதற்கான நடைமுறைகளையும் நெறிப்படுத்துதல் முதலானவை அவற்றுள் அடங்கும்.











தமிழர் பேரவை

3.8 2019-ஆம் ஆண்டில் தமிழர் பேரவை ஆதரவளித்த நிகழ்ச்சிகள்

எண்	நிகழ்வு	தேதி	ஏற்பாட்டாளர்
1	இந்து அறக்கட்டளை வாரியம் – மீடியாகார்ப் ஒலி சுகாதார விழா 2019	21 ஜூலை 2019	இந்து அறக்கட்டளை வாரியம்
2	பொங்கல் கொண்டாட்டம் & ஒளியூட்டு விழா 2019	11 ஜனவரி 2019	லிட்டில் இந்தியா கடைக்காரர்கள் மரபுடைமைச் சங்கம்
3	நிதி நிர்வாக தினம்	23 பிப்ரவரி 2019	நிதியறிவு நிலையம் & சிங்கப்பூர் இந்தியர் மேம்பாட்டுச் சங்கம்

3.9 இணை அமைப்புகளுக்கு ஆதரவளித்தல்

தமிழர் பேரவை, தொடர்ந்து ஆண்டு முழுவதும் இணை அமைப்புகளின் அனைத்து நிகழ்ச்சிகளுக்கும் ஆதரவளித்தது. நிதியாதரவைப் பொறுத்தமட்டில், இணை அமைப்புகளின் நிகழ்ச்சிகளுக்கு ஆதரவளிக்க, $500 முதல் $1,000 வரையிலான மானியம் வழங்கப்பட்டது. மேலும், இந்திய இளையர்களுக்கு ஆதரவளிக்கும் பழக்கத்தையும் பேரவை தொடர்ந்து மேற்கொண்டது. சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம், நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம், சிங்கப்பூர் நிர்வாகப் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் தமிழ் அமைப்புகள் நடத்தும் வருடாந்திர நிகழ்ச்சிகளுக்கு பேரவை மானியங்கள் வழங்கியது.

4 நிர்வாகம்

4.1 கூட்டங்கள்

2019-ஆம் ஆண்டில், தமிழர் பேரவை ஐந்து மேலாண்மைக் குழுக் கூட்டங்களை நடத்தியது. பல செயலவைக் குழுக் கூட்டங்களும், திட்டப்பணிக் கூட்டங்களும் நடத்தப்பட்டன. பிற்சேர்க்கை 'இ-1', 'இ-2' ஆகியவற்றில், மேலாண்மைக் குழுக் கூட்டங்களுக்கான வருகைப் பதிவு இடம்பெற்றுள்ளது.

பல்வேறு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வதற்கும், நிர்வாக அம்சங்களைக் கவனிக்கவும், செயலவைக் குழுக் கூட்டங்கள் அவசியமாகத் திகழ்ந்தன. செயலவைக் குழுக் கூட்டங்களில் கலந்து பேசி, முடிவெடுக்கப்பட்ட அம்சங்கள் குறித்து, அடுத்தடுத்து நடைபெற்ற மேலாண்மைக் குழுக் கூட்டங்களில் ஒப்புதல் பெறப்பட்டன.

இவை தவிர்த்து, துணைக் குழுக்களின் தலைவர்களும் தத்தம் குழு உறுப்பினர்களுடன் கூட்டங்ககளை நடத்தினர். அக்கூட்டங்கள் தொடர்பான அறிக்கைகள், மேலாண்மைக் குழுக் கூட்டங்களில் சமர்ப்பிக்கப்பட்டு, உரிய வகையில் கலந்து ஆலோசிக்கப்பட்டு, தேவையான ஒப்புதல்களும் அளிக்கப்பட்டன.

4.2 தமிழர் பேரவையின் ஊழியர்கள்

2019-ஆம் ஆண்டில், தமிழர் பேரவை தொடர்ந்து முழுநேர ஊழியர் ஒருவரை பணிக்கு அமர்த்தவில்லை. தொண்டூழியர் ஒருவர், குறிப்பிட்ட நாட்களில் மட்டும், ஒரு சில மணி நேரங்களுக்கு வந்து, குறிப்பிட்ட நிர்வாகப் பணிகளைக் கவனித்து வந்தார். அவருக்கு , மேலாண்மைக் குழுவின் ஒப்புதல்படி, மணி நேரத்திற்கு $10 வழங்கப்பட்டது.

4.3 உறுப்பினர்களையும் பொதுமக்களையும் ஈடுபடுத்துதல்

தமிழர் பேரவை, அதன் இணை அமைப்புகள், எதிர்வரும் நிகழ்ச்சிகள், விளம்பரச் செய்திகள், புகைப்படங்கள் உள்ளிட்ட பல பயனுள்ள தகவல்களை தமிழர் பேரவையின் இணையத்தளம் தொடர்ந்து வெளியிட்டது.

பொதுமக்களைத் தொடர்ந்து ஈடுபடுத்தும் முயற்சியை, தமிழர் பேரவை தமது Facebook பக்கத்தின் வாயிலாக மேற்கொண்டது. பேரவை தமது நடவடிக்கைகள் மட்டுமின்றி, இணை அமைப்புகளின் நடவடிக்கைகளையும் பற்றித் தொடர்ந்து தகவல்களை வெளியிட்டு, தமிழர் பேரவையின் நடவடிக்கைகளில் உதவ, தொண்டூழியர்களையும் திரட்டியது. தமிழர் பேரவையின் Facebook பக்கத்திற்கு, 8,000-க்கும் அதிகமான வாசகர்கள் உள்ளனர்.

செலவுகளைக் குறைக்கும் வகையில், செய்தி மடல்கள் ஏதும் அச்சிடப்படவில்லை. மேலும், தமிழர் பேரவையின் நடவடிக்கைகள் குறித்த விவரங்கள் சமூக ஊடகங்களில் கிடைக்கப்பெற்று வந்தன.

5 நிதி நிலவரம் (31 டிசம்பர் 2019 நிலவரப்படி)

தமிழர் பேரவையின் நிதிகள் தொடர்ந்து நிலையாக உள்ளன. டிசம்பர் 2019 இறுதி நிலவரப்படி, தமிழர் பேரவையின் மொத்த நிதிகள் $798,513.

- வங்கியில் இருக்கும் தொகை : $ 451,964
- நிலையான வைப்புத்தொகை : $ 344,549
- பெறவேண்டிய தொகை : $ 2,000

எண்	வங்கியின் பெயர்	வைப்புத்தொகை	முதிர்வடையும் தேதி
1	கிழக்காசிய வங்கி	$106,185	06 ஜூன் 2020
2	இந்தியன் ஓவர்சீஸ் வங்கி	$132,888	06 ஏப்ரல் 2020
3	யுகோ வங்கி	$105,476	26 பிப்ரவரி 2020
	மொத்தம்	**$344,549**	

2019-ஆம் ஆண்டுக்கான தமிழர் பேரவையின், வரவு - $178,074; செலவு - $194,572. ஆக, வரி விதிப்புக்கு முன்னர், பேரவையின் வரவுசெலவுக் கணக்குகளில், $16,498 நட்டம் பதிவானது.

ஒவ்வொரு மாதமும் / ஆண்டும் இருக்கக்கூடிய வரவு செலவுகளின் அடிப்படையில், கணக்குத் தணிக்கையாளர் நிதி அறிக்கைகளைத் தயார் செய்கின்றனர். அதன்படி, 2019-ஆம் ஆண்டில் நடைபெற்ற நிகழ்ச்சிகளுக்காக (சொற்போர், தேசிய தின விருந்து, இளையர் அணி நிகழ்ச்சிகள்) 2020-ஆம் ஆண்டில், $35,000-க்கும் அதிகமான தொகை கிடைக்கப்பெற்றது. இந்தத் தொகைகள், 2019-ஆம் ஆண்டு நிதிக் கணக்கில் வரவு வைக்கப்படவில்லை.


6. உறுப்பினத்துவம் / வங்கிக் கணக்கு வழி பணம் செலுத்துதல் (GIRO)

6.1 2019-ஆம் ஆண்டில் இறுதியில், நமது உறுப்பினத்துவ எண்ணிக்கை பின்வருமாறு:

உறுப்பினத்துவ வகை	2014	2015	2016	2017	2018	2019
ஆயுள்	262	275	281	295	298	300
சாதாரண	650	617	619	574	665	402
இளையர்	39	30	30	25	35	10
இணை அமைப்பு	31	34	36	40	37	33

வருடாந்திர சந்தாக்களை செலுத்தாத உறுப்பினர்களின் விவரங்கள் அகற்றப்பட்டு, உறுப்பினத்துவ ஆவணங்கள் சீர்செய்யப்பட்டன.


இளையர் உறுப்பினர்களில் பெரும்பாலானோர், ஆயுள் அல்லது சாதாரண உறுப்பினர்களாக மாற்றப்பட்டனர். இணை அமைப்புகளின் எண்ணிக்கை 37-இலிருந்து 33-ஆகக் குறைந்தது. இணை அமைப்புகள் மூடப்பட்டதும், பேரவையின் மேலாண்மைக் குழு அவற்றை நீக்கியதுமே அதற்குக் காரணம். தொடர் நினைவுறுத்தல்களுக்குப் பின்னரும், ஆண்டு சந்தாக்களை செலுத்தாத இணை அமைப்புகளின் உறுப்பினத்துவத்தை ரத்து செய்யும் முடிவை, மேலாண்மைக் குழு எடுத்தது. அவற்றின் சந்தாக்கள் முழுமையாக செலுத்தப்பட்ட பின்னர், அவற்றின் உறுப்பினத்துவ நிலை தொடரும்.



6.2 வங்கிக் கணக்கு வழி பணம் செலுத்துதல் (GIRO)

வங்கிக் கணக்கு வழி பணம் செலுத்தும் அனைத்து உறுப்பினர்களுக்கும் தமிழர் பேரவை தமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது. இத்தனை ஆண்டுகளில், தமிழர் பேரவையின் நிர்வாகச் செலவுகளுக்கும், பல்வேறு நிகழ்ச்சிகளுக்கும், ஒரு நிலையான நிதி வளமாக, இந்தப் பங்களிப்புகள் திகழ்ந்துள்ளன.

	2013	2014		2015	2016	2017	2018	2019
தொகை	$30,424	$31,723		$31,033	$29,188	$27,283	$25,953	$25,251



வருடாந்திர பங்களிப்புத் தொகைகளைப் பார்க்கும்போது, ஒவ்வோர் ஆண்டும் மொத்தத் தொகை தொடர்ந்து குறைந்துகொண்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. ஒவ்வோர் ஆண்டின் இறுதியிலும், கடந்த 12 மாதங்களாக பணம் செலுத்தாதவர்களின் விவரங்கள் அகற்றப்படும் வகையில் மறு-ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்படுகிறது. நிர்வாகம் தொடர்பிலான வங்கிக் கட்டணங்களைத் தவிர்ப்பதற்கு இது அவசியமாகிறது. பணம் செலுத்தாதவர்களைத் தொடர்புகொள்ளும் முயற்சிகள், பெரும்பாலும் பலனளிக்கவில்லை.

கடந்த ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவிற்கு இணங்க, வங்கிக் கணக்கின் வழி செலுத்தப்படும் தொகைகள், வெவ்வேறு கணக்குகளாக, ஏட்டளவில் பிரிக்கப்பட்டுள்ளன.

6.3 தமிழர் பேரவையின் நிதிகள் (கணக்கு அடிப்படையில்)

தமிழர் பேரவையின் அனைத்து நிதிகளும் ஒன்றிணைக்கப்படவேண்டும் என்று அரசியலமைப்புச் சட்டம் திருத்தப்பட்டதற்கு முன்பு இருந்த வெவ்வேறு கணக்குகளின் நிகர மதிப்புகளை, மேலாண்மைக் குழு சரிபார்த்து பதிவு செய்யவேண்டும் என்று ஆண்டுப் பொதுக்கூட்டட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. மேலும், பேரவையின் அரசியலைமைப்புச் சட்டத்தின்படி, கட்டட நிதிக் கணக்கு ஒன்றைத் திறப்பதற்கு பரிசீலிக்கும் வகையில், கட்டட நிதிக்கான தொகை ஒதுக்கப்படவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது

2014-ஆம் ஆண்டின் இறுதியில், தணிக்கை செய்யப்பட்ட நிதி அறிக்கையின்படி, நிதிகள் பின்வருமாறு பிரிக்கப்பட்டன:

நிர்வாகப் பொது நிதி:	$221,887
கட்டட நிதி:	$182,702
கலாசார நிதி:	$149,495
கல்வி நிதி:	$235,079

2015-ஆம் ஆண்டு முதல், வங்கிக் கணக்குகளின் வழி பெறப்பட்ட தொகைகள், கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. மேலும், அவ்வாறு பெறப்பட்ட தொகைகள், பின்வரும் வகையில் வெவ்வேறு கணக்குகளாக பிரிக்கப்படவேண்டும்:

நிர்வாகப் பொது நிதி : ஐந்தில் இரண்டு பங்கு
கட்டட நிதி : ஐந்தில் ஒரு பங்கு
கலாசார நிதி : ஐந்தில் ஒரு பங்கு
கல்வி நிதி : ஐந்தில் ஒரு பங்கு

ஆண்டு	மொத்தத் தொகை	நிர்வாகப் பொது	கட்டடம்	கலாசாரம்	கல்வி
2015	$31,033.00	$12,413.20	$6206.60	$6206.60	$6206.60
2016	$29,188.00	$11,675.20	$5837.60	$5837.60	$5837.60
2017	$27,283.00	$10,913.20	$5456.60	$5456.60	$5456.60
2018	$25,953.00	$10,381.20	$5190.60	$5190.60	$5190.60
2019	$25,251.00	$10,100.40	$5050.20	$5050.20	$5050.20
மொத்தம்	**$138,708.00**	**$55,483.20**	**$27,741.60**	**$27,741.60**	**$27,741.60**

மேற்குறிப்பிட்ட தொகைகளின்படி, டிசம்பர் 2019 நிலவரப்படி, ஒவ்வொரு நிதிக்கும் உரித்தான தொகை பின்வருமாறு:

நிர்வாகப் பொது	$277,370.20
கட்டடம்	$210,443.60
கலாசாரம்	$177,236.60
கல்வி	$262,820.60

குறிப்பு: மேற்குறிப்பிட்ட தொகைகள், ஒவ்வோர் ஆண்டுப் பொதுக்கூட்டத்திலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட, தணிக்கை செய்யப்பட்ட வரவுசெலவு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட செலவுகளை உள்ளடக்கவில்லை.

6.4 இணை அமைப்புகள்

2019-ஆம் ஆண்டின் இறுதியில், தமிழர் பேரவையில் 33 இணை அமைப்புகள் இருந்தன. முழுப் பட்டியல், பிற்சேர்க்கை 'ஈ'யில் இடம்பெற்றுள்ளது.

பின்வரும் அமைப்புகள், குறிப்பிடப்பட்ட காரணங்களுக்காக, 2018, 2019 ஆகிய ஆண்டுகளில், இணை அமைப்புகளின் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டன.

1	முருகன் திருக்குன்றம் ஆலயம்	விலகிக்கொள்ளுதல்
2	ரவீந்திரன் நாடக குழு	ஏழு ஆண்டுகளாக சந்தா செலுத்தவில்லை
3	செம்பவாங் தமிழர் பரஸ்பர நலச் சங்கம்	பதிவு ரத்து செய்யப்படுதல்
4	சூரியா@சிங்கப்பூர்	ஆறு ஆண்டுகளாக சந்தா செலுத்தவில்லை
5	தமிழ் சகோதரத்துவ சங்கம்	ஏழு ஆண்டுகளாக சந்தா செலுத்தவில்லை
6	தமிழர் தகவல் தொழில்நுட்பக் கழகம், சிங்கப்பூர்	ஏழு ஆண்டுகளாக சந்தா செலுத்தவில்லை
7	வேதாத்ரி மகரிஷி எளியமுறை குண்டலினி யோகா சங்கம்	விலகிக்கொள்ளுதல்

தமிழர் பேரவை ஆண்டு முழுவதும் நடத்திய வெவ்வேறு நிகழ்ச்சிகளில், அதன் இணை அமைப்புகளைத் தொடர்ந்து ஈடுபடுத்தி வந்தது. மேலும், மக்கள் கழகத்தில், அமைப்புகளுக்கான உறுப்பினத்துவத்தையும் தமிழர் பேரவை தொடர்ந்து தக்கவைத்துக்கொண்டுள்ளது. வளர்தமிழ் இயக்கம், தமிழ்மொழி கற்றல் வளர்ச்சிக் குழு ஆகிய அமைப்புகளில் தமது பிரதிநிதித்துவத்தையும் பேரவை தொடர்ந்தது. தலைவர், திரு பாண்டியன் இக்குழுக்களில் தொடர்ந்து பேரவையைப் பிரதிநிதித்து வருகிறார்.

7. முடிவுரை

தற்போதைய மேலாண்மைக் குழுவில், கடப்பாடு மிகுந்த, பல இளம் உறுப்பினர்கள் உள்ளனர். சமூகத்திற்கு சேவையாற்றவேண்டி, அவர்கள் முன்வந்துள்ளனர். மூத்த உறுப்பினர்களில் சிலர், அவர்களுக்கு வழிகாட்டவும் ஆதரவளிக்கவும் தொடர்ந்து மேலாண்மைக் குழுவில் இருந்து வருகின்றனர். இந்த அமைப்புமுறையின் வழி, மேலாண்மைக் குழு தமது நற்பணியைத் தொடர்ந்து, உறுப்பினர்களுக்கும் சமூகத்திற்கு ஆதரவளிக்கும் என்று நம்பிக்கை கொண்டுள்ளது.

அடுத்த பத்தாண்டில், நாம் அடியெடுத்து வைக்கும் வேளையில், இளம் தலைவர்களின் உன்னதமான முயற்சிகள், மேலும் பல இளையர்கள் முன்வந்து, முன்னைய தலைவர்களின் கடும் உழைப்பைத் தொடர ஊக்குவிக்கும் என்று நம்பப்படுகின்றது.

K S மணியம்
பொதுச் செயலாளர்
தமிழர் பேரவை (மேலாண்மைக் குழு சார்பில்)

தமிழர் பேரவை

பிற்சேர்க்கை 'அ': தலைவர் உரை

1. வரவேற்பு

முதற்கண், தமிழர் பேரவையின் இணை அமைப்புகளுக்கும் நலம் விரும்பிகளுக்கும் இத்தருணத்தில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இத்தனை ஆண்டுகளாக, நீங்கள் அளித்து வரும் தொடர் ஆதரவுக்கு மிக்க நன்றி. உங்கள் ஆதரவுடன், தமிழர் பேரவை தொடர்ந்து மேலும் இணக்கமாகவும் நிலைத்தன்மையுடனும் செயல்பட்டு வருகிறது.

இன்று வருகை தந்திருக்கும் அனைத்து உறுப்பினர்களுக்கும் இணை அமைப்பின் பிரதிநிதிகளுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வரும் ஆண்டுகளிலும், உங்கள் பங்களிப்பும் ஆதரவும் தொடர்வதை நான் எதிர்பார்த்திருக்கிறேன்.

2. பாராட்டு

மேலான்மைக் குழுவில் பல்லாண்டு காலம் சேவையாற்றிய பல உறுப்பினர்கள், இளைய தலைமுறையினர் குழுவில் இணைந்து சமூகத்திற்கு சேவையாற்ற வழிவிடும் நோக்கில், பதவி விலக விரும்புவதாய் தெரிவித்துள்ளனர். இத்தனை ஆண்டுகள் அவர்கள் ஆற்றிய சேவைக்கும், அவர்களின் கடப்பாட்டிற்கும் இத்தருணத்தில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி:
திரு விவேகானந்தன், திருவாட்டி ஜானகி, திரு காதர் சுல்தான், திருவாட்டி ஷோபா, திரு லக்ஷ்மய்யா, முனைவர் ஜெகதீசன், திரு தனபால் குமார், திரு துரைராஜ், திரு சீனி ஜாஃபர் கனி.

முன்னாள் தலைவர், முனைவர் தேவேந்திரன் அவர்களுக்கும், முனைவர் என் ஆர் கோவிந்தன், திரு ஆர் பாலன் ஆகியோருக்கும் அவர்களின் ஆதரவுக்கும் வழிகாட்டுதலுக்கும், மேலாண்மைக் குழு சார்பாக நன்றி தெரிவித்துகொள்கிறேன்.

குறிப்பு: அண்மைக் காலமாக, முனைவர் தேவேந்திரன் உடல் நலமின்றி இருக்கிறார். அவர் விரைவில் குணமடைய, நாம் ஒன்றிணைந்து வேண்டிக் கொள்வோம்.

3 சாதனைகள்

2019-ஆம் ஆண்டு, தமிழர் பேரவைக்கு இன்னொரு பரபரப்பான ஆண்டாக அமைந்துள்ளது. தமிழர் பேரவை ஏற்பாடு செய்த சில முக்கிய நிகழ்ச்சிகள் பின்வருமாறு:

- அனைத்துலக மாணவர் முழக்கம் 2018 (தமிழ்மொழி கற்றல் வளர்ச்சிக் குழுவின் ஆதரவில்)
- கல்வி உதவிநிதி விருதுகள்
- தமிழர் பேரவை இளையர் அணியின் துவக்க விழா
- இளையர்களுக்கான 'மாத்தி யோசி' கருத்தரங்கு (இளையர் அணி)
- சொற்போர் 2019 (தமிழ்மொழி கற்றல் வளர்ச்சிக் குழு, இருமொழிக் கல்விக்கான லீ குவான் யூ நிதி, ZEE தமிழ் ஆகியவற்றின் ஆதரவில்)
- தமிழா தமிழா கலந்துரையாடல் நிகழ்ச்சி (ZEE தமிழுடன் இணைந்து)
- வணிக வேட்டை (இளையர் அணி)

- இளையர் அணியின் கருத்தரங்கு அறிக்கையை சமூகத்தினருடன் பகிர்ந்துகொள்ளும் அமர்வு
- 'Open Mic' (இளையர் அணி, தேசிய நூலக வாரியத்துடன் இணைந்து)
- தேசிய தின விருந்து
- செயலியின் துவக்க விழா (குறி.SG)

பின்வரும் நிகழ்ச்சிகளுக்கும் நாம் நமது ஆதரவைத் தொடர்ந்து வழங்கி வந்துள்ளோம்.

- வளர்தமிழ் இயக்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற தமிழ்மொழி விழா
- லிட்டில் இந்தியா கடைக்காரர்கள் மரபுடைமைச் சங்கத்தின் பொங்கல், தமிழ்ப் புத்தாண்டு கொண்டாட்டங்கள்
- வரவுசெலவுத் திட்டம், பிரதமரின் தேசிய தினக் கூட்ட உரை ஆகியவை தொடர்பிலான மக்கள் கழகத்தின் கலந்துரையாடல் நிகழ்வுகள்
- சிண்டாவின் 'மீண்டும் பள்ளிக்குத் திரும்பலாம்' நிகழ்ச்சி
- இந்து அறக்கட்டளை வாரியம், சிண்டா, இளம் சீக்கியர் மன்றம் ஆகியவற்றுடன் இணைந்து ஏற்பாடு செய்த சுகாதார விழா
- இணை அமைப்புகள் ஏற்பாடு செய்த பல நிகழ்ச்சிகள்

தமிழர் பேரவையின் நான்கு துணைக் குழுக்கள் (இணை அமைப்புகள் & பங்காளிகள்; கல்வி, கலாசார விவகாரங்கள்; உறுப்பினத்துவம்; இளையர் விவகாரங்கள்) தொடர்ந்து அவர்களின் பொறுப்பின் கீழ் நடைபெற்ற நிகழ்வுகளில் ஈடுபட்டு வந்தன.

நாம், அனைத்து இந்திய அமைப்புகளுடனும் வலுவான, அணுக்கமான உறவை தொடர்ந்து பேணி வந்துள்ளோம். சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம், நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம், சிங்கப்பூர் நிர்வாகப் பலகலைக்கழகம் ஆகியவற்றின் மாணவ அமைப்புகளுடன் சீரான உறவுகளை நாம் நிறுவியுள்ளோம்.

லீ அறக்கட்டளை, சிங்கப்பூர் பந்தயப்பிடிப்பு வாரியம், கல்வி அமைச்சு ஆகியவற்றின் நிதி ஆதரவைத் தொடர்ந்து நாம் பெற்று வந்துள்ளோம்.

தமிழர் பேரவையின் இளையர் அணி, இவ்வாண்டு ஜனவரி மாதம் அதிகாரப்பூர்வமாகத் தொடங்கப்பட்டு முதல், விறுவிறுப்பாக செயல்பட்டு வந்துள்ளது. தற்போது, இளையர் அணியில், கிட்டத்தட்ட 100 உறுப்பினர்கள் உள்ளனர். அது பல நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்துள்ளது. சிண்டா, இளம் சீக்கியர் சங்கம், மக்கள் கழக நற்பணிப் பேரவை, சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம், நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம், சிங்கப்பூர் நிர்வாகப் பல்கலைக்கழகம் ஆகியவற்றுடன் தமிழர் பேரவையின் இளையர் அணி இணைந்து செயல்பட்டுள்ளது. இளையர் அணியின் 'மாத்தி யோசி' கருத்தரங்கின் கண்டுபிடிப்புகள், இவ்வாண்டு ஜூலை மாதம், சமூகத்தினரிடையே பகிர்ந்துகொள்ளப்பட்டது. அந்தக் கருத்தரங்கின் மூலம் முன்வைக்கப்பட்ட பல பரிந்துரைகள், ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டுவிட்டன. இவ்வாண்டு ஆகஸ்டு மாதம், சமூகச் செயலியான குறி.SG-யை, துணைப் பிரதமர் ஹெங் சுவீ கியாட் வெற்றிகரமாக அறிமுகம் செய்து வைத்தார். சிங்கையில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறுவதால், இது நமது சமூகத்திற்கு மிகவும் தேவையான ஒரு செயலி. இந்தச் செயலி, அனைத்து நிகழ்ச்சிகளின் விவரங்களையும் நமக்குத் தொகுத்து அளிக்கும். அதன்மூலம், நம்மில் பலர் இந்த நிகழ்ச்சிகளில் பலவற்றுக்கு ஆதரவளிக்க முடியும். மேலும் அதிகமான அமைப்புகள், உங்களுடைய நிகழ்ச்சிகளை இந்தச் செயலியின் மூலம் விளம்பரப்படுத்தி, இதற்கு ஆதரவு அளிப்பீர்கள் என்று நான் நம்புகிறேன்.

ஓராண்டு காலகட்டத்திற்குள், தமிழர் பேரவையின் இளையர் அணி நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வது மட்டுமின்றி, நமது இளையர்களை சமூகத்திற்கு சேவையாற்ற முன்வரும்படி ஊக்குவிக்கவும் முனைந்துள்ளது. அவர்களில் தலைமைத்துவ ஆற்றல் மிகுந்த சிலரை நான் அடையாளம் கண்டுள்ளேன். பின்னர், நான் அவர்களை உங்களுக்கு அறிமுகம் செய்து வைக்கிறேன். அவர்களை மேலாண்மைக் குழுவிற்குள் அழைத்து வர நான் எண்ணம் கொன்டுள்ளேன் (கண்டிப்பாக, உங்கள் ஆதரவுடன்).

இவ்வாண்டின் தேசிய தின விருந்து, இன்னொரு மைல்கல். நமது துணைப் பிரதமர் (அடுத்த பிரதமராக அடையாளம் காணப்பட்டிருப்பவர்) சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டதே ஒரு சாதனை. எனது கணிப்பு சரி எனில், துணைப் பிரதமராக நியமிக்கப்பட்ட பின்னர், அவர் கலந்துகொண்ட முதல் இந்திய சமூக நிகழ்வு நம்முடைய தேசிய தின விருந்தே ஆகும். அவரை சிறப்பு விருந்தினராக அழைத்து வருவது சுலபமான காரியம் அல்ல. துணைப் பிரதமரிடமிருந்து எனக்கு தனிப்பட்ட மின்னஞ்சல் ஒன்று கிடைக்கப்பெற்றதையும் நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த மடலில், அவர் தம்மை சிறப்பு விருந்தினராக அழைத்ததற்கு நன்றி தெரிவித்துக்கொண்டதுடன், நிகழ்ச்சி சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாகவும் தெரிவித்தார். அண்மையில், அமைச்சர் ஈஸ்வரனும் என்னிடம் இதுபற்றிப் பேசினார். துணைப் பிரதமர் நமது நிகழ்ச்சிக்கு வந்தது பற்றி, அவரிடம் மகிழ்ச்சி தெரிவித்ததாகவும், தமிழர் பேரவையும் சரியான பாதையில் சென்று கொண்டிருப்பதாகவும், அமைச்சர் ஈஸ்வரன் கூறினார். மேலும், தமிழர் பேரவை தமது நற்பணியைத் தொடரவேண்டும் (குறிப்பாக, நமது இளையர்களை ஈடுபடுத்தவேண்டும்) என்று அவர் கேட்டுக்கொண்டார்.

தமிழர் பேரவையானது நமது சமூகத்தில் மட்டுமின்றி, தமிழர் அல்லாத அமைப்புகளாலும், அரசாங்க அமைப்புகளாலும், தலைவர்களாலும் மதித்து போற்றப்படுவதையே இவை பிரதிபலிக்கின்றன. மேலாண்மைக் குழுவிலிருந்து வெளியேறும் உறுப்பினர்கள், நமது ஆலோசகர்கள், சக சமூகத் தலைவர்கள், உறுப்பினர்கள் ஆகிய அனைவரது ஆதரவிற்கும் வழிகாட்டுதலுக்கும் நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

4 உறுப்பினத்துவம்

கடந்த சில ஆண்டுகளுடன் ஒப்பு நோக்க, நமது ஆயுள், சாதாரண உறுப்பினர்களின் எண்ணிக்கை சிறிது அதிகரித்துள்ளது. நமது உறுப்பினத்துவத் துணைக் குழு தீவிரமாக புதிய உறுப்பினர்களைக் கொண்டு வர முனைந்ததும், இளையர் அணியின் உருவாக்கமுமே இந்த அதிகரிப்பிற்கான முக்கிய காரணங்கள். இளையர் அணியின் உறுப்பினர்கள் பலரும் முழு உறுப்பினர்களாக ஊக்குவிக்கப்பட்டனர்.

இருப்பினும், வங்கிக் கணக்கின் வழி முறையாக பணம் செலுத்துவோரின் எண்ணிக்கை மாதந்தோறும் குறைந்துகொண்டே வருகிறது. 2018-ஆம் ஆண்டில், சராசரியாக மாதந்தோறும் $2,162 வசூலித்து வந்தோம். 2019-ஆம் ஆண்டின் ஜனவரி முதல் ஜூன் மாதம் வரையில், இந்தத் தொகை $2,129-க்குக் குறைந்தது.

மேலும், இணை அமைப்புகளின் எண்ணிக்கையும் குறைந்துவிட்டது. சென்ற ஆண்டில் 40 இணை அமைப்புகள்; இவ்வாண்டில் 36 அமைப்புகள் மட்டுமே. இதற்குக் காரணம், ஓர் அமைப்பின் பதிவு ரத்து செய்யப்பட்டது; இரண்டு அமைப்புகள் விலகிக்கொள்ள எழுத்துப்பூர்வமாக விருப்பம் தெரிவித்துக்கொண்டன; இன்னோர் அமைப்புடன், பல ஆண்டுகள் தொடர்பு ஏதும் இல்லாத காரணத்தால், அதனை அகற்ற மேலாண்மைக் குழு முடிவெடுத்தது.

5 நிதிகள்

நமது நிதிகள் தொடர்ந்து நிலையாக உள்ளன. 2018-ஆம் ஆண்டின் இறுதியில், நமக்கு $12,000 உபரித் தொகையாக இருந்ததை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

